www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 செப்டெம்பர் 10 சனிக்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 214 | Saturday 10, September, 2022 | 14 பக்கங்கள் | 40/-

பொதுமக்களின் கோரிக்கைக்கு செவிமடுப்பு

## ரயில் இருக்கை முன்பதிவு கால எல்லை நீடிப்பு



புகையிரத இருக்கைகளை முன்பதிவு செய்வதற்கான 14 நாட்கள் என்ற கால எல்லை 30 நாட்களாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களம் பொதுமக்களின் கோரிக்கையை கருத்திற்கொண்டு 06



# பிரிட்டனின் 2 ஆம் எலிசபெத் மகாராணியார் காலமானார்

## இளவரசர் சார்ள்ஸ் புதிய மன்னரானார்

பிரிட்டனின் மகாராணி 02 ஆவது எலிசபெத் உடல்நலக் குறைவால் தனது 96 ஆவது வயதில் வியாழக்கிழமை இரவு காலமானார். அவரது மறைவுக்கு உலகத் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மகாரணியாரின் மரணத்துடன், முன்னாள் வேல்ஸ் இளவரசரான அவரது மூத்த மகன் சார்ள்ஸ், புதிய அரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது தந்தை ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மறைவைத் தொடர்ந்து, 1952இல் அரியணையேறிய இரண்டாம் எலிசபெத், சாதனையாக 70 ஆண்டுகள் அரசியாக இருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் இதுவரை 15 பிரிட்டன் பிரதமர்களை அவர் நிர்வகித்துள்ளார்.

95 வயதிலும் கொரோனா பாதிப்பிலிருந்து கடந்த பெப்ரவரி மாதம் அவர் மீண்டு வந்தார். இவர், கோடைக் கால ஓய்வுக்காக பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து சென்று, ஸ்காட்லாந்திலுள்ள பால்மரால் அரண்மனையில் தங்கியிருந்தார். அரசியின் மகளான இளவரசி ஆன், அவருடன் இருந்தார்.

பிரிட்டனின் புதிய பிரதமராக செவ்வாய்க்கிழமை பதவியேற்ற லிஸ் ட்ரஸ்ஸை நேரில் அழைத்து மகாராணி 02 ஆவது எலிசபெத் சந்தித்ததுதான் கடைசி நிகழ்வாக அமைந்தது. அதன் பின்னர் எலிசபெத்தின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் லிஸ் ட்ரஸ்ஸின் முழு அமைச்சரவை பதவியேற்பு விழாவும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், எலிசபெத் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை வியாழக்கிழமை அறிவித்தது. 06

எலிசபெத் மகாராணி மறைவு:

## அரச நிறுவனங்களில் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு அமைச்சு சுற்றறிக்கை



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையொட்டி, அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 06

## பிரிட்டிஷ் மகாராணிக்கு சபையில் மௌன அஞ்சலி

இரண்டு நிமிடங்கள் அனுஷ்டிக்கப்பட்டது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமரத்துவமடைந்த பிரிட்டிஷ் மகாராணிக்கு அனுதாபம் தெரிவித்து பாராளுமன்றத்தில் நேற்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. 06

# அபிவிருத்திகளுக்கு தடையாக சுற்றறிக்கைகள் உள்ளனவா?

## அவற்றை கண்டறிந்து உடனடியாக திருத்துமாறு ஜனாதிபதி உத்தரவு



இந்திய முதலீட்டில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு தடையாகவுள்ள விடயங்களை கண்டறிந்து, உடனடி தீர்வு வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்பு

அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதில் சுற்றறிக்கைகள் தடையாக இருப்பின், அவற்றை உடனடியாக திருத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் இந்திய முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (09) நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

அந்த கலந்துரையாடலில் இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேக்கப் கலந்துகொண்டார்.

இதன்போது, இந்திய முதலீட்டில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு தடையாகவுள்ள விடயங்களை கண்டறிந்து, அவற்றுக்கு உடனடி தீர்வு வழங்குமாறும் ஜனாதிபதி, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். 06

IMF ஊழியர்கள் மட்ட ஒப்பந்தம்:

## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது

சபையில் சபாநாயகர் அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இலங்கை செய்துகொண்ட ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தில் வரிகள் தொடர்பான சில முக்கிய விடயங்கள் உள்ளதால் அது தொடர்பான விவரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்க முடியாது 06

தேசிய சபை யோசனை கிடைப்பதில் தாமதம்:

## பாராளுமன்ற அமர்வு நேற்று 24 நிமிடங்களில் ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற அமர்வு நேற்றைய தினம் சில நிமிடங்களே நடைபெற்றதுடன் 24 நிமிடங்களில் சபை ஒத்திவைக்கப்பட்டது.

தேசிய சபை அமைப்பதற்கான அறிவித்தல் தொடர்பான யோசனை பாராளுமன்றத்துக்கு கிடைப்பதற்கு தாமதமாகியதால் அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள முடியாது நேற்று பாராளுமன்ற அமர்வு 24 நிமிடங்களில் ஒத்திவைக்கப்பட்டது. 06

## மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த அயராது பாடுபடுவேன்

பதவியேற்ற பின்னர் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்



தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிலைமை சீராகி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு காத்திரமான நடவடிக்கையினை மேற்கொள்வதே காலத்தின் தேவையாகும். அமைச்சு பொறுப்புக்களுக்கு அப்பால் நாம் கடின உழைப்பின் பக்கம் செல்ல வேண்டிய 06

## அரிசி, பருப்பு, சீனியின் விலைகள் குறைப்பு

நேற்று முதல் அமுல் என்கிறார் சதொச தலைவர்

சதொசவில் விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி, சிவப்பு பருப்பு, வெள்ளை சீனி மற்றும் உளுந்து ஆகியவற்றின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சதொச தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று (09) முதல் இந்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச தலைவர் மேலும் தெரிவித்தார். 06

நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால்

## நாளொன்றுக்கு 10 மணிநேர மின்வெட்டு ஏற்பட நேரிடும்




CEB பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால் நாளொன்றுக்கு சுமார் 10 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைக்கு தயாராக இருக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர எச்சரித்துள்ளார். 2022 ஒக்டோபருக்குள் CEB க்கு போதுமான 06



கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று உத்தியோகபூர்வமாக அமைச்சு அலுவலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்ற போது....

## பொருளாதார அபிவிருத்தியில் நாடு பின்னடைய இனவாதமே காரணம்

பாராளுமன்றத்தில் முஷாரப் MP உரை



அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே முதன்மையான நாடாக பார்க்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி அடையாத நாடுகளின் நிலைமைகளை நோக்கி பின்னோக்கி தள்ளப்பட்டதற்கான அடிப்படை காரணம் இனவாதமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி 06



## முறைப்பாடுகளை அரசிடம் முன்வைக்க திட்டம் வகுப்பு

வவுனியா, மன்னார், முல்லை மக்களுக்கு சந்தர்ப்பம் 03

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம்:

## புதிய சில அம்சங்களுடன் வழங்கும் முறைமை விரைவில்

ICTA நேற்று விசேட அறிவிப்பு 03

## வவுனியா ஆலய திருவிழாவில் வாள்வெட்டு

மூவர் வைத்தியசாலையில் அனுமதி

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் திருவிழாவின் போது ஆலயத்துக்குள் நேற்று (09) இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் மோதல் காரணமாக மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றில் கடந்த 10 தினங்களாக வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் (08) மாலை திருவிழாவின்போது ஆலயத்திலிருந்த சிலருக்கும் ஆலய பகுதிக்கு வந்த பிறிதொரு குழுவினருக்குமிடையில் கைகலப்பு 06

வைத்தியரின் ஆலோசனை பிரகாரம்

## நடிகை தமிதா சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதி



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நடிகை தமிதா அபேரத்ன சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் (08) வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டு பெண்கள் பிரிவில் வைக்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் அவரது உடல்நிலையை பரிசோதித்த வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் 06

## இலங்கைக்கு ஆதரவாக இந்தியாவும் ஜப்பானும்

இந்திய இராணுவ முன்னாள் அதிகாரி தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெறுவதற்கு இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு ஆதரவாக நிற்கும் என இந்திய இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரி – ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரலுமான பீ.ஆர். சங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை சீன ஆய்வு மையத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜப்பான் இலங்கையில் ஆழமான பிணைப்பைக் கொண்டுள்ளதுடன், மக்கள் சார்பு திட்டங்களை செயற்படுத்தி வருவதாகவும் பீ.ஆர்.சங்கர் குறிப்பிட்டுள்ளார். 06

## ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த தமிழரசு கட்சியே காரணம்

இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் சபையில் சாணக்கியனுக்கு சாட்டை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதமேந்த அடித்தளமிட்டவர்களே தமிழரசுக் கட்சியினர் தான் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கு சாபக்கேடு என்றால் சாணக்கியன் பிரதிநிதித்துவம் வகிக்கும் இலங்கை தமிழரசுக்கட்சி தமிழ் மக்களைப் பிடித்த தரித்திரமென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எனது சக எம்.பி.யான சாணக்கியன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியையும் என்னுடைய பெயரையும் தரக்குறைவாக பேசியிருந்தார். 06

## சர்வதேச செய்திகள்

# எலிசபெத் ராணியின் மரணத்திற்கு உலகெங்கும் துக்கம் அனுஷ்டிப்பு



## மன்னராக உடன் அரியணை ஏறினார் சார்ல்ஸ்; இறுதிக் கிரியைக்கு தயாராகி றது லண்டன்



பிரிட்டிஷ் வரலாற்றில் நீண்ட காலம் பதவி வகித்த ராணி இரண்டாம் எலிசபெத் ஸ்கொட்லாந்திலுள்ள தனது பால்மோரல் எஸ்டேட்டில் கடந்த வியாழக்கிழமை (08) தனது 96ஆவது வயதில் காலமானார்.

ராணியின் நான்கு குழந்தைகளில் மூத்தவரான வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ் உடன் மன்னராக அறிவிக்கப்பட்டார். தற்போது 73 வயதாகும் சார்ல்ஸ் பிரிட்டிஷ் வரலாற்றில் மன்னராக அரியணை ஏறிய வயதானவராக பதிவானார்.

அவர் மூன்றாவது சார்ல்ஸ் மன்னர் என்று அழைக்கப்படுவார் என அரச குடும்ப அதிகாரிகள் உறுதி செய்தனர். 1685 தொடக்கம் இந்தப் பெயரில் அழைக்கப்படும் முதல் மன்னராக அவர் இடம்பெற்றுள்ளார்.

சார்ல்ஸ், புதிய அரசராக இருந்து 14 பொதுநலவாய நாடுகளுக்குத் தலைவராகவும் விளங்கி நாட்டை துக்க காலத்தில் வழி நடத்துவார்.

70 ஆண்டுகள் ராணியாக இருந்த இரண்டாவது எலிசபெத்தின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் அனுதாபங்களை வெளியிட்டு வருகின்றனர். பல நாடுகளிலும் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. எலிசபெத் ராணி அவரது 70 ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் இரண்டு நூற்றாண்டுகளின் சமூக, அரசியல் மற்றும் தொழில்நுட்ப எழுச்சிகளை கண்டுள்ளார்.

மத்திய லண்டனில் இருக்கும் பக்கிங்ஹாம் அரண்மனையின் வாயில்களில் மலர்கள் மற்றும் ஒளிரும் மெழுகுவர்த்திகளை வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். தலைநகரில் ராணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வீதி ஓரங்களில் அவரின் புகைப்படங்களுடனான பதாகைகள் வைக்கப்பட்டு வருகின்றன.

மன்னராக சார்ல்ஸ் தனது முதல் அறிவிப்பில், “அவரது (ராணியின்) மறைவு எனக்கும் எனது குடும்பத்தின் அனைவருக்கும் பெரும் துயரமான தருணம்” என்று குறிப்பிட்டார்.

“நேசத்துக்குரிய, மிக அன்பான தாயின் மறைவுக்கு நாங்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறோம்” என்று மாட்சிமை மிக்க அரசர் என்று கையொப்பம் இட்ட அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

“அவரது இழப்பு முழு நாட்டுக்கும், பிராந்தியத்திற்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் உலகெங்கும் உள்ள எண்ணிலடங்காத மக்களுக்கும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி இருக்கும் என்று நான் அறிவேன்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராணியின் மறைவு பற்றி பக்கிங்ஹாம் அரண்மனை குறுகிய அறிக்கை ஒன்றை வெளியிட்டு, 10 நாட்கள் தேசிய துக்கதினத்தை அறிவித்தது. அவரது நீண்ட ஆயுள் மற்றும் சாதனைகளை முறியடித்த ஆட்சிக்கும் உலகளாவிய அஞ்சலிகள் குவிந்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இன்று மாலை (8) ராணி அமைதியாக உயிர்நீத்தார்” என்று பிரிட்டிஷ் நேரப்படி வியாழக்கிழமை மாலை 6.30க்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டது.

மன்னர் (சார்ல்ஸ்) மற்றும் துணைவரான அரசியார் (கமிலா) பால்மோரலில் தொடர்ந்து தங்கி இருந்து நேற்று வெள்ளிக்கிழமை லண்டன் திரும்பினர்.

ராணியின் மரணம் பற்றிய அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னர் அது பற்றி அறிந்து கொண்ட பிரிட்டிஷ் பிரதமர் லிஸ் ட்ரஸ், முதலாவது எலிசபெத்துக்கு பின் சுமார் 500 ஆண்டுகளின் பின்னரான இரண்டாவது எலிசபெத்தின் மரணத்திற்கு அனுதாபத்தை வெளியிட்டார்.

ராணியின் உடல் நேற்று லண்டனுக்கு எடுத்துவரப்பட்டதோடு இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகளை அரண்மனை செய்து வருகிறது.

### மரண அறிவித்தல்

ராணியின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாகவும் அவர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாகவும் மருத்துவர்கள் கடந்த வியாழக்கிழமை காலை அறிவித்த நிலையிலேயே அவரது மரணம் பற்றிய அறிவிப்பை அரச மாளிகை வெளியிட்டது.

ராணியின் குழந்தைகளான சார்ல்ஸ், இளவரசி ஆன் (72), இளவரசர் அன்ட்ரூ (62) மற்றும் இளவரசர் எட்வர்ட் (58) ஸ்கொட்லாந்திலுள்ள பால்மோரல் எஸ்டேட்டில் கூடினர்.

இவர்களுடன் சார்ல்ஸின் மூத்த மகன் இளவரசர் வில்லியம் மற்றும் வில்லியமின் பிரிந்த நிலையில் வாழும் சகோதரர் ஹரியும் இணைந்தனர்.





ராணி மரணிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே அவர் அரச தலைவராக நாட்டின் பிரதமர் பதவிக்கு ட்ரஸை நியமித்திருந்தார். அவர் வின்ஸ்டன் சர்ச்சிலை பிரதமர் பதவிக்கு நியமித்தது தொடக்கம் தனது பதவிக் காலத்தில் 15 பிரதமர்களை கண்டுள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் புன்முறுவலுடன் காணப்பட்டபோதும் நடப்பதற்கு தடி ஒன்றை பயன்படுத்தி சோர்வாக இருந்தார்.

தமது ஆட்சிக்காலம் முழுவதும் தமது பிரதமருடன் வாராந்திர சந்திப்புகளை அவர் நடத்தி வந்தார்.

இரண்டாம் உலகப் போரின் பின்னரான சிக்கன நடவடிக்கையின் போதே 1952 இல் தனது 25ஆவது வயதில் அவர் முடிசூடிக்கொண்டார். பேரரசில் இருந்து பொதுநலவாயம் ஆக நாடு மாற்றம் அடைந்தது, பனிப்போரின் நிறைவுக்காலம், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்தது மற்றும் வெளியேறியது அவரது பதவிக் காலத்தில் நிகழ்ந்தது.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் பல சர்ச்சைகள் இடம்பெற்றபோதும் இரண்டாம் எலிசபெத் ராணியின் புகழ் ராணியாகவும் அரச தலைவராகவும் குறையாமல் இருந்தது.

இந்நிலையில் நியூசிலாந்து தனது புதிய அரசராக சார்ல்ஸை அறிவித்துள்ளது.

### கண்ணீருடன் கூடும் மக்கள்

ராணி 56 பொதுநலவாய நாடுகளின் தலைவராகவும் இருந்தார். இந்த அமைப்பு மனித குலத்தின் கால் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அவர் இங்கிலாந்து தேவாலயத்தின் உயர் ஆளுநராகவும் இருந்தார். இந்த தேவாலயம் உலகளாவிய அங்கிலிக்கன் சமூகத்தின் தாய் தேவாலயமாகும்.

இந்நிலையில் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு வெளியில் கண்ணீர் மல்க மக்கள் கூடி பாடல்களை இசைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

“அவருக்கு 96 வயது என்பது எனக்குத் தெரியும். என்றாலும் மரணச் செய்தி அதிர்ச்சியாகவே உள்ளது” என்று லண்டனைச் சேர்ந்த 24 வயது ஜோஷுவா எல்லிஸ் கண்ணீருடன் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். “ராணியை எப்போதுமோ திடகாத்திரமானவராகவே பார்க்க முடிந்தது” என்றும் அவர் குறிப்பிட்டார்.



இந்த செய்தி தாங்கக் கடினமானதாக இருந்தது என்று சார்லி வொல்ஸ்டன் ஹோம் கூறினார். “எனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் வரை அவர் ராணியாக இருந்தார். அவர் மிக மிக முக்கியமானவராக இருந்தார்” என்று அவர் குறிப்பிட்டார்.

தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் தமது வழக்கமான நிகழ்ச்சிகளை நிறுத்தி, ராணியின் நீண்ட ஆட்சிக்காலத்தை நினைவுகூரும் நிகழ்ச்சிகளை ஒளி, ஒலிபரப்ப ஆரம்பித்துள்ளன.

தேசிய கீதம் இசைக்கப்பட்டு, தேசிய கொடிகள் இறக்கப்பட்டதோடு தேவாலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டன.

பக்கிங்ஹாம் அரண்மனை மற்றும் ஏனைய அரச மாளிகைகளின் வாயில்களில் உள்ள கண்ணாடிக்குப் பின்னால் கறுப்பி நிறத்தில் ஓர் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது. அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ இணையதளமும் கறுப்பு நிறமாக மாறியது.

நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமான தேசிய துக்க தினம், லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபேவில் இறுதிப் பொதுப் பிரியாவிடையுடன் நிறைவடையும்.

அரச குடும்பம் தற்போதில் இருந்து ராணியின் இறுதிச் சடங்குகள் நிறைவடைந்து ஏழு நாட்கள் வரை துக்கதினத்தை அனுஷ்டிப்பதாக பக்கிங்ஹாம் அரண்மனை நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. ராணியின் இறுதிச் சடங்கு திகதி நேற்று பின்னேரம் வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

வெள்ளை மாளிகை மற்றும் ஏனைய மத்திய அரச கட்டடங்கள், அதேபோன்று உலகெங்கும் உள்ள இராணுவ மற்றும் இராஜதந்திர தளங்களில் தேசியக் கொடியை அரக்கம்பத்தில் பறக்கவிடும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

நிகரற்ற மரியாதைக்குரிய அரச தலைவி என்று ராணியை பைடன் வர்ணித்துள்ளார். “எமது உறவை சிறப்பாக்குவதற்கு அவர் உதவினார்” என்று கூறிய பைடன், ஏற்கனவே நெருக்கமான உறவை பேணும் அடுத்த தலைவருடன் பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### முடிசூட்டு விழா

மன்னர் சார்ல்ஸின் முடிசூட்டு விழாவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் அதற்குரிய சம்பிரதாயம், வரலாற்று அம்சம் மற்றும் சடங்குகளுடன் அந்த நிகழ்வு இடம்பெறும்.

சார்ல்ஸ் முறைப்படி முடிசூட்டப்படும் போதுதான், அவர் அடுத்த தலைமைக்கான நிலையை எட்டும் உயரிய கட்டத்தை அடைகிறார். இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்பதால், சார்ல்ஸ் பதவியேற்ற உடனேயே முடிசூட்டு விழா நடக்க வாய்ப்பில்லை. ராணி எலிசபெத் 1952ஆம் ஆண்டு பெப்ரவரியில் அரியணை ஏறினார், ஆனால் 1953ஆம் ஆண்டு ஜூன் மாதம்வரை அவர் முடிசூட்டப்படவில்லை.

கடந்த 900 ஆண்டுகளாக வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் தான் முடிசூட்டு விழா நடைபெற்றது. வில்லியம் தான் அங்கு முடிசூட்டப்பட்ட முதல் மன்னர் ஆக விளங்கினார். அந்த வரிசையில் 40ஆவது ஆக முடிசூட்டிக் கொள்பவராக சார்ல்ஸ் இருப்பார்.

தமது முடிசூட்டலை உலகம் பார்வையிட அதன் முன்னே புதிய அரசர் முடிசூட்டிக் கொண்டு உறுதிமொழி எடுப்பார். இந்த விரிவான விழாவில் அவர் தனது புதிய பாத்திரத்தின் அடையாளமாக உருண்டை மற்றும் செங்கோலை பெறுவார். அப்போது கேன்டர்பரி பேராயர் திடமான தங்க கிரீடத்தை அவரது தலையில் வைப்பார்.

இந்நிலையில் சார்ல்ஸின் மூத்த மகனான இளவரசர் வில்லியம் முடிக்குரிய இளவரசராவதோடு அவரது மனைவி கதரின் ராணியின் அதிகாரபூர்வ பாத்திரத்தில் பணியாற்றவுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 10 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்



**தொழுகை நேரம்**
09 முதல் 11 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.13 |
| மஃரிப் | 06.14 |
| இஷா | 07.25 |

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆவணி 25

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்தமரண யோகம்
திதி: பவுர்ணமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நிறைவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | பொறுமை |
| விருச்சிகம் | செலவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | மகிழ்ச்சி |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்கு ரஷ்யா தொடர்ந்தும் உதவும்

## ரஷ்யத் தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதி



பதவிக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மேட்டரி (Yury Materiy), ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை (08) ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கையில் தனது பதவிக்காலம் நிறைவடைந்துள்ளபோதும் இலங்கையுடனான உறவை வலுப்படுத்த தான் தொடர்ந்தும் பணியாற்றுவேனென்றும் அவர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்தும் அதேநேரம் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் யூரி மேட்டரி இதன்போது வலியுறுத்தினார்.

06

# முறைப்பாடுகளை அரசிடம் முன்வைக்க திட்டம் வகுப்பு

## வவுனியா, மன்னார், முல்லை மக்களுக்கு சந்தர்ப்பம்



வவுனியா, மன்னார், முல்லைத்தீவை சேர்ந்த மக்கள் தமது அவசரத் தேவைகள், முறைப்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கும் உள்ளூராட்சி அதிகாரிகளிடம் இருந்து அதற்கான துரிதமான பதிலை பெற்றுக் கொள்வதற்குமான பொறிமுறை ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரின் பணிப்புரையின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள பொறிமுறையின் மூலம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களின் குறைகள் ஆளுநரின் செயலகத்தினால் கேட்டறியப்படும் என ஆளுநர் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளுநர் செயலகம் – வட மாகாணம்,பழைய பூங்கா, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது hgnpdisasteror@np.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு மக்கள் தமது தேவைகள் தொடர்பில் தெரிவிக்க முடியும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களால் ஆளுநர் செயலகத்திற்கு வழங்கப்படும் அனைத்து

06

# சீனாவிலிருந்து அன்பளிப்பாக 5,000 மெற்றிக் தொன் அரிசி

## கல்வி அமைச்சரிடம் கையளிப்பு



சீன மக்களின் நட்புறவின் மற்றுமொரு அடையாளமாக, இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக அரிசி வழங்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக, சீன அரசாங்கம் 5,000 மெற்றிக் தொன் அரிசியை வழங்கியுள்ளது.

அன்பளிப்பாக வழங்கப்படும் அரிசியை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்றது. கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் சீனத் தூதுவர் Qi Zhenhong உட்பட இரு தரப்பிலிருந்தும் பல அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த உணவுத் திட்டத்தின்

06

### வாழ்வாதாரம், அவசர உதவித் திட்டத்துக்கு

# ADB மற்றும் JFPR நிதியத்தால் 203 மில்.அமெ.டொ. கடனுதவி

## நிதி அமைச்சில் நேற்று ஒப்பந்தம் கைச்சாத்து



பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு அவசர உதவித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வளமான மற்றும் நெகிழ்ச்சியான ஆசிய மற்றும் பசிபிக் பகுதிக்கான (Japan Fund for Prosperous and Resilient Asia and the Pacific) ஜப்பான் நிதியத்திலிருந்து இலங்கைக்கு 203 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்படுகிறது.

குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிதியளிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களில் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடன் வழங்கப்படும். மேலும், வளமான மற்றும் நெகிழ்ச்சியான ஆசிய மற்றும் பசிபிக் பகுதிக்கான ஜப்பான் நிதியம் (JFPR) திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக ADB மூலம் 03 மில்லியன் அமெரிக்க டாலர்களை மானியமாக வழங்கும். மொத்த திட்டச் செலவு USD 203.36 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் 0.36 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டது.

இந்த திட்டம் சமுர்த்தி

06



நிதி இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று உத்தியோகபூர்வமாக நிதிஅமைச்சு அலுவலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்ற போது....



நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சனத் நிஷாந்த நேற்று உத்தியோகபூர்வமாக அமைச்சு அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றார்...



கடற்றொழில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பியல் நிஷாந்த நேற்று உத்தியோகபூர்வமாக கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதன்போது கலந்துகொண்டார்



மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கீதா குமாரசிங்க நேற்று உத்தியோகபூர்வமாக அமைச்சு அலுவலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்ற போது....

# புதிய இராஜாங்க அமைச்சர்கள்

01 ஜகத் புஷ்பகுமார – வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு
02 ரஞ்சித் சியம்பலாபிட்டிய – நிதி
03 லசந்த அலகியவண்ண – போக்குவரத்து
04 திலும் அமுனுகம – முதலீட்டு ஊக்குவிப்பு
05 கனக ஹேரத் –தொழில்நுட்பம்
06 ஜனக்க வக்கும்புர – மாகாண சபைகள், உள்ளூராட்சி
07 ஷெஹான் சேமசிங்க – நிதி
08 மொஹான் பிரியதர்சன டி சில்வா – விவசாயம்
09 தேனுக விதானகமகே – நகர அபிவிருத்தி,வீடமைப்பு
10 பிரமித்த பண்டார தென்னகோன் – பாதுகாப்பு
11 ரோஹண திசாநாயக்க –விளையாட்டு, இளைஞர் விவகாரம்
12 அருந்திக்க பெர்ணான்டோ – நகர அபிவிருத்தி,வீடமைப்பு
13 விஜித்த பேருகொபிரிவேனா – கல்வி
14 லொஹான் ரத்வத்தை – பெருந்தோட்டக் கைத்தொழில்
15 தராக்க பாலசூரிய – வெளிவிவகாரம்
16 இந்திக்க அனுருத்த – மின்வலு, எரிசக்தி
17 கௌரவ. சனத் நிசாந்த – நீர் வழங்கல்
18 சிறிபால கம்லத் – நெடுஞ்சாலைகள்
19 சாந்த பண்டார – வெகுஜன ஊடகம்
20 அநுராத ஜெயரத்ன – நீதி, சிறைச்சாலை மறுசீரமைப்பு
21 எஸ்.வியாழேந்திரன் – வர்த்தகம்
22 சிசிர ஜெயக்கொடி – சுதேச மருத்துவம்
23 பியல் நிசாந்த டி சில்வா – மீன்பிடி
24 பிரசன்ன ரணவீர – சிறு, மத்திய தொழில் முயற்சி
25 டீ.வி சானக்க – வனஜீவராசிகள், வனவளப் பாதுகாப்பு
26 டீ.பி.ஹேரத் – கால்நடை அபிவிருத்தி
27 சசீந்திர ராஜபக்ஷ – நீர்ப்பாசனம்
28 மருத்துவர் சீதா அரம்பேபொல – சுகாதாரம்
29 காதர் மஸ்தான் – கிராமிய பொருளாதாரம்
30 அசோக்க பிரியந்த – உள்நாட்டலுவல்கள்
31 அரவிந்த குமார் – கல்வி
32 கீதா குமாரசிங்க – மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம்
33 சிவநேசத்துரை சந்திரகாந்தன் – கிராமிய வீதி அபிவிருத்தி
34 கலாநிதி சுரேன் ராகவன் – உயர் கல்வி
35 டயனா கமகே – சுற்றுலாத் துறை
36 சாமர சம்பத் தஸநாயக்க – ஆரம்பக் கைத்தொழில்
37 அனுப பியும் பஸ்குவல் – சமூக வலுவூட்டல்

### தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம்

# புதிய சில அம்சங்களுடன் வழங்கும் முறைமை விரைவில்

தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரம் வழங்கும் முறைமையில் புதிய அம்சம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) நேற்று (09)அறிவித்துள்ளது.

ஜெனரேட்டர்கள், புல்வெட்டிகள் மற்றும் பிற உபகரணங்கள் போன்ற வாகனம் அல்லாத வகைகளுக்கு QR மூலம் எரிபொருள் விநியோகத்தை இதன் மூலம் செயற்படுத்தியுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விளக்கம் கொண்ட தகவல்கள் விரைவில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

### மறைத்து வைக்கப்பட்டுள்ள

# துப்பாக்கிகள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு பணப் பரிசில்

மறைத்து வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு பணப் பரிசில்களை வழங்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

வழங்கப்படவுள்ள பணப் பரிசில் தொகை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு விசேட நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.50 | 256.43 |
| கனடியன் டொலர் | 272.16 | 285.15 |
| யூரோ | 353.45 | 368.56 |
| ஜப்பான் யென் | 2.5937 | 2.6993 |
| சிங்கப்பூர் டொலர் | 254.19 | 265.21 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 418.55 | 435.71 |
| சுவிஸ் பிராங்க் | 368.26 | 385.71 |
| அமெரிக்க டொலர் | 357.40 | 368.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.52 | கட்டார் ரியால் | 98.22 |
| குவைத் டினார் | 1,173.60 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.65 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.28 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 13

**குறள் தரும் சிந்தனை**

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர வேறு துணை தேவையில்லை.

## உலக மக்களின் உள்ளத்து இராணியாக திகழ்ந்தவர் இரண்டாம் எலிஸபெத்!

இவ்வுலகில் இருந்து விடைபெற்றிருக்கும் இரண்டாம் எலிஸபெத் மகாராணி இங்கிலாந்தின் இராணியானாலும் உலக மக்கள் அனைவருமே தமக்கு நெருக்கமான ஒருவரை இழந்த தவிப்பை உணர்ந்துள்ளனர். அவர் உலக மகாராணியாகவே கருதப்பட்டு வந்துள்ளார் என்பதை இது தெளிவாகவே உணர்த்துவதாக உள்ளது.

உலக முடியாட்சியை எடுத்துக் கொண்டால் பிரெஞ்சு மன்னர் 14ம் லூயிக்கு அடுத்து நீண்ட காலமாக அரியணையில் வீற்றிருந்தவர் என்ற பெயரை மறைந்த ராணியார் பெறுகிறார். லூயி மன்னர் 72 ஆண்டு காலம் ஆட்சி செய்துள்ளார். இராணியாரின் ஆட்சிக் காலம் 70 வருடங்களாகும். அவரது தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணத்தையடுத்து தனது 25வது வயதில் 1952ம் ஆண்டு பெப்ரவரி ஆறாம் திகதி பரந்து விரிந்த பிரிட்டிஷ் பேரரசின் இராணியாக எலிஸபெத் அலெக்ஸ்ன்ட்ரா மேரி வின்சர் இரண்டாம் எலிஸபெத்தாக முடிசூடிக் கொண்டார்.

உலகில் பல அரச குடும்பங்களும் பல அரசர்கள், இராணிமாரும் இருந்திருக்கின்ற போதிலும் உலக மக்களின் இராணியாக எலிஸபெத் ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கு காரணங்கள் பல இருந்தாலும் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் குடிமக்களாக இருந்தோம் என்ற கோடிக்கணக்கான உலக மக்களின் உணர்வே அவரை உலக இராணியாக உயர்த்தியிருக்க வேண்டும்.

சிறுவயது நினைவுகளை எடுத்துக் கொண்டால் இராணியாரும் எடின்பரோ கோமானும் கம்பீரமாகக் காட்சிதரும் அப்புகைப்படங்கள் பலர் மனதை விட்டு நீங்கியிருக்க வாய்ப்பில்லை. அழகிய தோற்றம், கம்பீரமான இராணிக்குரிய முகம், அவர் பொது வெளியில் தொடர்ச்சியாகப் பயன்படுத்திய நேசத்தைத் தூண்டும் அழகியல் என்பன மக்கள் மனதை கொள்ளையிட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் மகாராணியார் சாதாரண மக்களுடன் நேரிடையாக தொடர்பு கொண்டவர் அல்ல. பொது நலவாய அமைப்பின் தலைவியாகவும், பிரிட்டிஷ் கலாசாரம் மற்றும் ஆங்கில மொழியின் காவலராகவும், இங்கிலாந்து அரசின் தலைவியாகவும் திகழ்ந்திருக்கிறாரே தவிர சாதாரண மக்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருக்கும் வாய்ப்பை அவர் பெற்றிருக்கவில்லை.

அவரது மாமனார் எட்டாம் எட்வர்ட் மன்னர் இரண்டு தடவைகள் விவாகரத்து செய்த வில்லிஸ் சிம்சன் என்ற பெண்ணை மணப்பதற்காக தன் மணிமுடியைத் துறப்பதற்கும், இளவரசி டயானா சாதாரண மக்களுடன் பழகுவதற்கும், அரச குடும்பத்தில் அடுத்தடுத்து விவாகரத்துகள் நிகழ்வதற்கும், அவரது பேரன் ஹரி அமெரிக்க பெண்ணை மணந்து அரச குடும்ப அந்தஸ்தைத் துறப்பதாக அறிவித்ததும் எதைக் குறிப்பாகக் காட்டுகிறது என்றால், மன்னர் கால வழிமுறைகள் இன்றைக்கும் பொருந்தாது என்பதைத்தான்.

அந்த வகையில் மன்னர் குடும்பத்து வழிமுறைகளையும், மாண்பையும் குடும்பத்து அறத்தையும் அச்சொட்டாக பேணி வந்த கடைசி முடியாட்சியாளராக இரண்டாம் எலிஸபெத்தே இருக்கப் போகிறார்.

மகாராணியார் இலங்கைக்கு இரண்டு தடவைகள் விஜயம் மேற்கொண்டிருக்கிறார். 1954ம் ஆண்டு இலங்கையின் தலைவி என்ற வகையில் அவரது முதல் பயணம் அமைந்தது. 1972ம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்படும் வரை மகாராணியாரே நாட்டின் தலைவியாகத் திகழ்ந்தார். அதனால் இலங்கைக்கான தேசாதிபதியை நியமிக்கும் அதிகாரத்தை இராணியாரே கொண்டிருந்தார்.

1962ம் ஆண்டு இலங்கையில் நிகழவிருந்த இராணுவப் புரட்சிக்கு அன்றைய தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக்க உடந்தையாக இருந்திருக்கக் கூடும் என சந்தேகப்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, ஒலிவரை நேரடியாக பதவி நீக்கம் செய்ய முடியாத நிலையில் தனது செயலாளரான பிரட்மன் வீரக்கோனை ஒரு செய்தியுடன் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.

பக்கிங்ஹாம் மாளிகையில் மகாராணியாரை சந்தித்த பிரட்மன் வீரக்கோன், சேர் ஒலிவர் குணதிலக்கவை பதவி நீக்கம் செய்யும்படி கோரும் இலங்கை பிரதமரின் கடிதத்தைக் கையளித்தார். அதை ஏற்றுக் கொண்ட மகாராணியார் ஒலிவரை பதவி நீக்கம் செய்து அவருக்கு பதிலாக ஸ்ரீமாவோவின் உறவினரான வில்லியம் கோபல்லாவையை தேசாதிபதியாக நியமித்தார்.

அவரது இரண்டாவது பயணம் 1981ம் ஆண்டு அமைந்தது. ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆர். ஜயவர்தன அவருக்கு பிரமாண்டமான வரவேற்பளித்தார். 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டை நினைவுபடுத்தும் வகையில் இந்த பயணம் அமைந்திருந்தது.

மகாராணியார் 25 வயதில் மகாராணியாக முடிசூடிக் கொண்ட போதிலும் அவரது மூத்த மகன், முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ்சுக்கு அந்த வாய்ப்பு 73 வயதிலேயே வாய்த்திருக்கிறது. அவர் இரண்டாவது முறையாக ஒரு கணவரை இழந்தவரை திருமணம் செய்திருப்பதால் இளவரசரின் மன்னர் பதவி நிலைக்குமா என்ற கேள்விகள் லண்டனில் முளைவிட்டுள்ளன.

எனவே மகாராணியார் விட்டுச் சென்றிருக்கும் ஒரு பிரமாண்டமான வெற்றிடத்தை சார்ள்ஸ் அல்லது அவருக்கு அடுத்ததாக வரக் கூடியவரால் இட்டு நிரப்ப முடியுமா என்பது ஒரு நீண்ட காலத்துக்கான கேள்வியாகவே இருக்கப் போகிறது.

editor.tkn@lakehouse.lk

# இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் முழு உலகினதும் ஆளுமையின் அடையாளம்



இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக்குறைவால் நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 96. மகாராணி எலிசபெத்தின் உடல்நிலை அவ்வப்போது தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வந்தது. எனினும் தொடர்ந்து அவர் அரசு விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பங்கேற்றார். தொடர்ந்து நடக்க முடியாத சூழலில், அவர் கைத்தடி ஏந்தி நிகழ்வுகளில் கலந்து கொண்டார். சமீபத்தில் கூட பிரிட்டன் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்ட லிஸ் ட்ரஸ், மகாராணியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிலையில், இரண்டு நாட்களாக மகாராணியில் உடல்நிலை ஆரோக்கியமாக இல்லை என்று தகவல்கள் வெளியாகின. உடல்நிலை மோசமான நிலையில் தொடர் மருத்துவ கண்காணிப்பில் இருந்து வந்தார். இதனிடையே, பால்மோர இல்லத்தில் அவர் உயிர் பிரிந்தது என்று பக்கிங்ஹாம் அரண்மனை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் மரணத்தை அடுத்து, உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

21 ஏப்ரல் 1926 அன்று லண்டனில் உள்ள மேஃபேரில் பிறந்தவர் எலிசபெத் மகாராணி. பிரிட்டிஷ் வரலாற்றில் சுமார் 70 ஆண்டு காலம் அரசபதவியில் இருந்தவர். தனது பதவிக்கால வரலாற்றில் 15 பிரதமர்களை பதவியேற்று வைத்துள்ளார்.

பிரிட்டனில் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952ம் ஆண்டு மரணம் அடைந்தபோது, நாட்டின் ராணியாக பதவியேற்றவர். அப்போது பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில், அதன் பின்னர் வந்த சேர் அண்டனி

## உலக மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்த மிகப் பெரும் சரித்திர வரலாறு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது!





ஈடன், போரிஸ் ஜோன்சன் தொடங்கி, லிஸ் ட்ரஸ் வரை 15 பிரதமர்களை அவர் நியமித்து அவர்களோடு பணியாற்றி உள்ளார். 96 வயதாகும் ராணி எலிசபெத், 3 நாட்களுக்கு முன்பு பிரிட்டனின் புதிய பிரமதராக தேர்வு செய்யப்பட்ட லிஸ் ட்ரஸ்ஸுக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார்.

கடந்த 2021ம் ஆண்டு ராணி எலிசபெத்தின் கணவரும், எடின்பரோ கோமகனுமான பிலிப் காலமானார். கணவர் மறைவையடுத்து அவரது உடல் நலம் குன்றியது.

பிரிட்டன் இராணி எலிசபெத் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அவரது மகன்களும், இளவரசர்களான சார்ள்ஸ், எட்வர்ட், அண்ட்ரூ, மகள் ஆனி ஆகியோர் அவருடனேயே இருந்தனர்.

இராணியின் மூத்த மகனான இளவரசர் சார்ள்ஸின் மகன் வில்லியமும் அவருடனேயே இருந்தார். வெளிநாட்டில் இருக்கும் மற்றொரு மகன் ஹரி, ஹரியின் மனைவி மேகன் ஆகியோர் லண்டனுக்கு வந்தனர்.

மக்கள் மனதில் இடம் பிடித்து பின்பு ராணியாக 1952ஆம் ஆண்டு முடிசூட்டிக் கொண்டு ஒரு நாட்டை 70 ஆண்டு காலம் ஒரு பெண்ணால் ஆள முடியும் என்பதை நிரூபித்துகாட்டியவர் தான் ராணி இரண்டாம் எலிசபெத்.

1926 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இங்கிலாந்து அரச குடும்பத்தில் பிறந்தவர் எலிசபெத் அலெக்சேன்ட்ரா மேரி. அவர் பிறந்தபோது இங்கிலாந்தை அவரது பாட்டன் ஐந்தாம் ஜோர்ஜ் ஆண்டு கொண்டிருந்தார்.

இவரது தந்தை பெயர் ஆறாம் ஜோர்ஜ். தாய் பெயர் எலிசபெத். இதனால் இவர் இரண்டாம் எலிசபெத் இராணி என அழைக்கப் பட்டு வந்தது.

அவரது பாட்டன் ஐந்தாம் ஜோர்ஜ் 1936ல் மரணமடைந்த போது மன்னராக மூத்த மகன் எட்டாம் எட்வர்ட் அரியணை ஏறினார்.

ஆனால் குறுகிய காலத்திலேயே தன்னுடைய காதலுக்காக மன்னர் பதவியைத் துறந்தார். அதைத் தொடர்ந்து எலிசபெத்தின் தந்தையான அல்பர்ட் ஆறாம் ஜோர்ஜ் என்ற பெயருடன் மன்னரானதும் 10 வயதில் பட்டத்து இளவரசி ஆனார் எலிசபெத்.

1952 ஆம் ஆண்டில் தந்தை மறைந்ததும் இங்கிலாந்தின் இராணியாக முடிசூடினார் இரண்டாம் எலிசபெத்.

இவர் பிறந்த நேரத்தில், மணிமுடியை ஏற்பது இவருக்கு விதிக்கப்பட்டதாக இருக்கும் என வேறு எவரும் ஊகித்துக் கூட பார்த்திருக்காத ஒன்றாக இருந்தது.



முன்னதாக மகாராணி பிரிட்டன் இளவரசியாக இருந்த போது செல்வச் செழிப்பான வாழ்க்கையை நடத்தினார். அனைத்து வசதிகளும் அரண்மனையிலேயே இருந்தன. ஆசிரியர்கள் வீட்டுக்கு வரவழைக்கப்பட்டு கல்வி போதித்தனர். குதிரை சவாரி செய்ய விண்ட்சர் கிரேட் பூங்காவிற்கு சென்று வந்த எலிசபெத் தனது கணவரான பிலிப்பை முதன் முதலில் அங்கு தான் சந்தித்தார்.

பிலிப் கிரீஸ் மற்றும் டென்மார்க்கின் இளவரசராக இருந்தார். எலிசபெத் தனது 13வது வயதில் காதலை பிலிப்பிடம் வெளிப்படுத்தினார்.

இதையடுத்து இருவரும் காதல் கடிதங்களை பரிமாறிக் கொண்டனர். அதன் பிறகு ஜூலை 1947ல் நிச்சயதார்த்தம் நடந்தது. அதே ஆண்டு நவம்பர் 20ல் திருமணம் நடந்தது.

இந்த திருமணம் சர்வேதேச நிகழ்வாக இருந்தது. காதல் கொண்ட நிலையில் 1947ல் ராணி எலிசபெத்தின் கரம் பற்றினார் பிலிப்.

இவர்களுக்கு ஒரு வருடம் கழித்து இளவரசர் சார்ள்ஸ் பிறந்தார். அதன் பிறகு ஆன், அண்ட்ரூ, எட்வர்ட் என்ற மகன்கள் பிறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கணவர் பிலிப் கடந்த ஆண்டு உயிரிழந்த நிலையில் கடந்த சில நாட்களாக ராணி எலிசபெத்தின் உடல்நிலையும் மோசமானது. ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோர் அரண்மனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

எனினும் தொடர்ந்து அவர் அரசு விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பங்கேற்றார். தொடர்ந்து நடக்க முடியாத சூழலில், அவர் கைத்தடி ஏந்தி நிகழ்வுகளில் கலந்து கொண்டார். சமீபத்தில் கூட பிரிட்டன் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட லிஸ் ட்ரஸ், மகாராணியை நேரில் சந்தித்து வாழ்த்தினார்.







சுமார் 70 ஆண்டுகாலம் அரசபதவியில் இருந்த மகாராணி தனது பதவிக்கால வரலாற்றில் வின்ஸ்டன் சேர்ச்சில் முதல் இன்றைய போரிஸ் ஜான்சன் வரை 15 பிரதமர்களை பதவியேற்று வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் உலகில் எந்த நாடுகளுக்கு வேண்டுமானாலும் அவர் சென்று வரலாம், அதற்கு கடவுச்சீட்டு தேவையில்லை என்பது விதியாக இருந்தது. இங்கிலாந்தில் அவர் கார் ஒட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் தேவையில்லை.

அவர் போக்குவரத்து விதிகளை மீறினாலும் தண்டிக்க முடியாது. ஆனாலும் இதுவரை எந்த சர்ச்சையிலும் அவர் சிக்கியதில்லை பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை இன்று வரை உயிர்ப்போடு வைத்திருப்பது மட்டுமல்ல சமூக மாற்றத்திற்கான முன்னோடியாகவும் இருந்துள்ளார்.

மன்னர் ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வந்தவர். குறிப்பாக அரச குடும்பத்திற்கும், அரண்மனைக்கும் தேவையான செலவினங்களை இங்கிலாந்து மக்களின் வரி பணத்திலிருந்து வழங்கும் முறையை 2012 ஆம் ஆண்டு மாற்றினார்.

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளின் பிரதமர்கள் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அந்த நாட்டிற்கான நிரந்தர அதிபர் ராணி எலிசபெத் தான்.

எந்த நாட்டின் மீது போர் தொடுக்கும் அதிகாரம் இருந்தாலும் இதுவரை போர் தொடுக்க விரும்பியதில்லை. பிரிட்டனில் இவர் ஆட்சி பொறுப்புக்கு வந்த பின் இதுவரை 13 அமெரிக்க அதிபர்கள் மாறியிருக்கிறார்கள். இவ்வாறு உலக மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்த மிகப் பெரும் சரித்திர வரலாறு நேற்றுமுன்தினத்துடன் முடிவுரை எழுதிக் கொண்டது.



## 70 ஆண்டு காலம் பிரித்தானிய மகாராணியாக திகழ்ந்து, உலகின் பெண் அரச தலைவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்கியவர்

# இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை பெருமையுடன் கொண்டாடுவதற்கு தயாராகுமாறு ஜனாதிபதி ஆலோசனை

**பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கூட குறைந்த செலவினங்களுடன் 75 ஆவது சுதந்திர தினத்தை தனித்துவமான, விசேட நிகழ்வாகக் கொண்டாட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**


75ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 7 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார்.

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை வண்ணமயமாக கொண்டாடும் வகையில் அன்றைய தினம், காலி முகத்திடலில் பல்வேறு கலாசார அம்சங்களுடன் தேசிய நிகழ்வை நடத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, முப்படை மற்றும் பொலிஸாரின் அணிவகுப்பு, நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் கலாசார அம்சங்கள் மற்றும் இளைஞர்களின் நிகழ்ச்சிகள் என்பவற்றை ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார்.

09 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலை, கலாசார மற்றும் சமய நிகழ்ச்சிகளை அந்தந்த மாகாணங்களின் அரசியல் தலைமைகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் இணைந்து நடத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களை முதன்மையாகக் கொண்டு கல்வி அமைச்சினால் போட்டிகளை ஏற்பாடு செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இளைஞர்களுக்காக மாகாண மட்டத்தில் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்துமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவித்தார்.





பொதுமக்கள் கலந்து மகிழும் வகையில் இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் அர்த்தமுள்ள வகையில் ஒழுங்கமைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சுதந்திர தின நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள பிரதான அரசாங்க அரங்குகள், திரையரங்குகள் மற்றும் கொழும்பு தாமரைத்தடாக அரங்கு, டவர் மண்டபம், எல்பின்ஸ்டன் மற்றும் ஜோன் டி சில்வா அரங்கு என்பவற்றை குறிப்பிட்ட காலத்திற்கு சலுகை விலை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

சுதந்திர தினத்துடன் இணைந்ததாக ,குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 1996 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பேலியகொட, தெமட்டகொட, மொரட்டுவ, மஹரகம மற்றும் கொட்டாவ பிரதேசங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளன. கலைஞர்களுக்காக கொட்டாவ பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டமொன்று நிர்மாணப்படும். இந்த வீடுகளை அரசியல் தொடர்புகள் அல்லது சிபாரிசுகள் பேரில் வழங்குவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சுதந்திர தினத்துடன் இணைந்ததாக, குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1996 வீடுகளை வழங்க ஜனாதிபதி திட்டம்

முன்னுரிமை மற்றும் சரியான தேவையின் அடிப்படையில் மாத்திரம் இந்த வீடுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான பொறிமுறையொன்றை உடனடியாக தயாரிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் கண்காட்சிகளை நடத்துவதற்கும், தேவேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை வரையில் கண்காட்சி சைக்கிள் சவாரி ஒன்றை நடத்துவதற்கும் ஜனாதிபதி அவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரதமர் தினேஷ் குணவர்தனவின் மேற்பார்வையில், ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் உப குழுக்களை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேமஜயந்த, விதுர விக்கிரமநாயக்க, காஞ்சன விஜேசேகர, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேகுணவர்தன, கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம். பி.கே.மாயாதுன்னே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல் கமல் குணரத்ன, புத்த சாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எச்.எல்.வி. லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் எஸ். கே.பத்திரன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதன்ன, பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் தர்மதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விசேட விருந்தினர்களாக சார்க் நாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்பு

ஜனாதிபதி ஊடகப் பிரிவு (PMD)

# தேசமான்ய பாக்கீர் மாக்கார் அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், உயர்ந்த பணிகளும்

**கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கற்று உயர்ந்தவர்களில் பாக்கீர் மாக்கார் குறித்து சொல்லப்பட வேண்டிய ஒருவர். சட்டக் கல்லூரி மாணவராக இருந்தபோது ஸாஹிறா கல்லூரி விடுதி ஆசிரியர்களுள் ஒருவராக இருந்து பணி செய்தவர். 1949 இல் சட்டக் கல்லூரியில் சட்டக் கற்கையை முடித்துக்கொண்டு பாக்கீர் மாக்கார் 1949 இல் பேருவளை நகரசபை அங்கத்தவராக, அதன் தலைவராகவெல்லாம் பணி செய்து இருக்கின்றார்.**

1950 இல் ஐ.தே.கட்சியினூடாக அவரின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.1960 மார்ச் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி 1960 இல் நிகழ்ந்த தேர்தலில் தோல்வியுற்றார்.1965 இல் மீண்டும் வெற்றி பெற்று 1970 இல் தோல்வியடைந்தார். 1977 இல் மீண்டும் வெற்றியீட்டினார். 21.9.19781986 வரை இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகராக சிறப்பு பணியாற்றிய அவர், ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் ஜனாதிபதியாகவும் பணி செய்து புகழீட்டினார். 1983 தொடக்கம் 1988 வரை இலாகா இல்லாத அமைச்சராகவும் , 9.6.1988 இருந்து தென்மாகாண ஆளுநராகவும் பணி செய்தவர் அவர்.

சுவாமி விபுலாநந்தரின் மிக நெருங்கிய நண்பன் பண்டிதர் மு.நல்லதம்பி.

"மனக்கினிய பெருங்குணத்து
நல்ல தம்பிப் பாவலன்"

இவ்வாறு சுவாமி விபுலாநந்தரினால் புகழ்ந்தோதப்பட்ட பண்டிதர் மு.நல்லதம்பி, விபுலாநந்தரின் விருப்பத்தின் பேரில் தம் பணியை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் தொடர்ந்து, புலமையும் தலைமைத்துவப் பண்பும் கொண்ட பலரை தமிழ் கூரு நல்லுலகுக்கு அளித்தவர்.வீ.நல்லையா, பதியுத்தீன் மஹ்மூத், பாக்கீர் மாக்கர், எம்.எல்.ஏ. அபூசாலி, ஏ.ஸி.எம்.அமீர், எம்.ஈ.எச்.முஹம்மதலி,எஸ்.எம்.கமால்தீன், எம் எச்.எம்.நெய்னா மரிக்கார், எம்.ஏ.எம். ஹுசைன்,முஹ்ஸீன், எம்.எஸ்.எம்.ஹத்தார், எஸ்.எல்.எம்.ஷாபி மரிக்கார், பேராசிரியர் ஏ.எம்.எம்.மக்கீன், றாசிக் மரிக்கார், ஐ.எல்.எம்.மஸூர், எம்.எம். இஸ்மாயில், ஏ.எம்.மேர்ஸா முதலான புகழ்பூத்த ஆளுமைகள் நல்ல தம்பிப் புலவர் ஸாஹிறாவில் கற்பித்த காலத்தில் அவரின் தமிழமுதத்தை பருகியவர்களுட் சிலர்.

பாக்கீர் மாக்கார் ஸாஹிறாக் கல்லூரி ஆளுநர் சபை உறுப்பினராக, அதன் தலைவராகவெல்லாம் பணி செய்தவர்.அவர் ஆளுநர் சபைத் தலைவராக இருந்த போது ஸாஹிறாக் கல்லூரியின் உதவி அதிபராக நியமிக்கப்பட்டவன் என்ற வகையிலும் அவருடன் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணியவன் என்ற வகையிலும் அப் பெருந்தகையின் தமிழ்ப் பணி பற்றி இக்கட்டுரையினூடு சில தகவல்களைத் தரவிழைகிறேன்.

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் 'தமிழ் இலக்கிய மன்றம்'ஜாயாஅதிபராகவிருந்த காலத்தில் 11.11.1929 இல் தாபிக்கப்பட்டது. இத்தமிழ் இலக்கிய மன்றத்தின் ஆரம்பம் தமிழ் பாரம்பரியம் ஒன்றின் ஆரம்பத்தை இக் கல்லூரியில் ஏற்படுத்திற்று. அதிபர்களான எ.எம்.எ.அஸீஸ் காலத்திலும் ஷாபி மரிக்கார் காலத்திலும் தொடர்பறாது பேணப்பட்ட இத் தமிழ்ப் பாரம்பரியம் இன்று வரை நின்று நிலவுகிறது.ஜாயா காலத்தில் ஒவ்வொரு அரையாண்டுக்கும் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து சிறப்பாகச் செயற்பட்ட இத்தமிழ் இலக்கிய மன்றத்தின் 1939 ஆம் வருட அரையாண்டுக்கான உத்தியோகத்தவர்களாகப் பின்வருவோர் தெளிவாகினர்.

தலைவராக பண்டிதர் மு.நல்லதம்பியும், உப தலைவர்களாக மௌலவிகள் ஹனீப் நத்வி,எம்.இ.அபுல் ஹஸன்,என்.ஜே.நவரத்தினம்,ஏ.ஸி.ஏ.வதூத் ஆகியோரும்,செயலாளராக எஸ்.எம்.கமால் தீனும் தெரிவு செய்யப்பட்ட அம்மன்றத்தின் சபாநாயகராக எம்.ஏ.பாக்கீர் மாக்கார் செயற்பட்டார். எஞ்சிய அரையாண்டிற்கான அவ்விலக்கிய மன்றத்தின் உத்தியோகத்தராகவும் அவர்களே செயற்பட்டனர்.அச்சங்கத்தின் சங்கீத ஆசிரியர்களாக மு.நல்லதம்பி,என்.ஐ.நவரத்தினம், மௌலவி அபுல் ஹஸன்,எம்.வை.எம்.பளீல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தமிழ் இலக்கிய மன்றக் காலத்தில் பாக்கீர்மாக்காரின் தலைமையில் பல நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன. பல வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரபாயின. பண்டிதர் நல்லதம்பியின் முயற்சியில் சங்கீதமும் மன்றத்தின் முக்கிய அம்சமாகவிருந்தது. புலவர் நல்லதம்பி பாடல்களை எழுதிக் கொடுத்து மாணவர்களை உற்சாகப்படுத்தினார். 'மங்கையர்'என்ற மகுடத்தில் ஏ.எம்.கே.குமாரசாமி அவர்களின் சொற்பொழிவும் 19.7.1939 மன்றத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்தது. ஸாஹிறாவில் தமிழ் நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தவென 700 இற்கும் மேற்பட்ட நூல்கள் சேகரிக்கப்பட்டன.

நல்லதம்பிப் புலவரின் நண்பன் சட்டத்தரணி என்.எம்.ஹனிபா அவர்களும் இம்முயற்சியில் இலக்கிய மன்றத்துக்கு உதவினார். இவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.முகம்மதின் தந்தையார் என்பது அறிதற்குரியது. இக்காலத்தில்தான், அதாவது, 1936,37,38 களில்தான், ஒரு தவணைக்கு எட்டு சொற்பொழிவுகள் வீதம் 'தமிழ் மொழி'பற்றி புலவர் நல்லதம்பி வானொலியில் உரைகள் நிகழ்த்தினார். பாடசாலைக்கல்வி ஒலிபரப்பில் புலவரின் இவ்வுரைகள் ஒலிபரப்பாயின.

லண்டன் மெற்றி குலேசன் பரீட்சைக்கு பாக்கீர் மாக்கார் தமிழையும் ஒரு பாடமாக எடுத்துச் சித்தி பெற்றிருந்தார். அதற்கு அதிபர் ஜாயாவும் புலவர் நல்லதம்பியும் பங்குதாரர்கள். லண்டன் மெற்றி குலேசன் பரீட்சைக்கு தயாராகுவதில் பாக்கீர் மாக்கார் பல சிக்கல்களை எதிர்நோக்கினார். அவர் ஸாஹிறாக் கல்லூரியில் சேர்வதற்கு முன்னர் சென்.செபஸ்தியன் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த 'தாவரவியல் பாடத்தைக் கற்க ஸாஹிறாக் கல்லூரியில் வசதிகள் இருக்கவில்லை.

ஒரு வருடத்திற்குள் புதிய பாடங்களைக் கற்க வேண்டிய இக்கட்டானநிலைக்கு பாக்கீர் தள்ளப்பட்டார். கணிதத்திலும் தன்னுடையத ரத்தை உயர்த்த வேண்டியிருந்தது. லத்தீன் மொழியையும் புதிதாகக் கற்க வேண்டியிருந்தது. மூன்றாவது பாடமாக எதை எடுப்பதென்பது பாக்கீர் மாக்காரை கவலை கொள்ளச் செய்திருந்தது.





பாக்கீரின் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அதிபர் ஜாயாவும் களமிறங்கினார். ஸாஹிறாவின் தமிழ்க் கற்பித்தலுக்குப் பொறுப்பாகவிருந்த புலவர் நல்லதம்பியிடம் பாக்கீரை அனுப்பி தமிழை ஒரு பாடமாகப் பரீட்சைக்கு எடுக்கும் சாத்தியம் பற்றி புலவரின் அபிப்பிராயத்தை அதிபர் கோரினார். பாக்கீரின் தமிழ் மொழி அறிவு லண்டன் மெற்றி குலேசன் பரீட்சைக்குப் போதுமானதாக இருக்கவில்லை. பாக்கீரின் தமிழ் புலமையைப் பரீட்சிக்க வேண்டி 'ஹஜ்ஜுப் பெருநாள்'பற்றி அவரை ஒரு கட்டுரை எழுதச் சொன்னார் புலவர்.

பாக்கீர் எழுதிய கட்டுரை புலவருக்கு திருப்தி தரவில்லை. சிவப்புநிறப் பென்சிலால் கட்டுரைக்குக் குறுக்கே கோடிட்டு"*This boy knows no Tamil and will never learn any*" என்று எழுதிய குறிப்புடன் பாக்கீரின் கையிற் கொடுத்து ஜாயாவிடம் அனுப்பி வைத்தார் புலவர்.

ஆயினும், வேறு வழியேதுமின்றி ஒரேயொரு மார்க்கம் இதுவாகவே தெரிந்ததால், பாக்கீரைத் தமிழ் வகுப்பில் சேர்த்து முயற்சிக்குமாறு ஜாயா மறுபடியும் வேண்டிக் கொண்டார். அதற்கிணங்க பாக்கீரும் புலவரின் தமிழ் மொழி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பாக்கீரின் அயராத ஊக்கம் புலவரின் கடும் முயற்சியில் பாக்கீருக்கு வெற்றியைக் கொடுத்தது. பாக்கீர் லண்டன் மெற்றி குலேஷன் பரீட்சையில் தமிழிலும் சித்தி பெற்றார். தன்னுடைய முயற்சியில் வெளிவந்த '*Crescent 1939*' ஐ அதிபர் ஜாயாவுக்குக் கையளிக்கச் சென்ற பாக்கீருக்கு அவர் லண்டன் மெற்றி குலேசன் பரீட்சையில் சித்தி அடைந்த நற்செய்தியை ஜாயா எத்தி வைத்து மகிழ்ச்சி தெரிவித்தமை பாக்கீரின் வாழ்வில் முக்கிய நிகழ்வாயிற்று.

பாக்கீர் தோல்வியடைந்த முதலாவது தேர்தலில் அவரின் வெற்றியை நாடி நின்றவர்களில் அவரின் தமிழ்ப் பேராசான் மு.நல்லதம்பியும் ஒருவர். கடும் முயற்சி செய்து தமிழ் கற்பித்து உருவாக்கிய தன்னுடைய மாணவன் பாக்கீர் மாக்கார் பற்றி கவிதையொன்றையும் யாத்து பேருவளை மக்களின் நாவுகளில் தவிழ விட்டார் நல்லதம்பிப் புலவர். இன்றும் கூட பேருவளை ஊரின் முதியவர்களின் நாவுகளில் தவழும் அப்பாடல் கீழே தரப்படுகிறது:

“கீர்த்தி மலிந்திட்ட வேர்வலை மாநகர்
சீர் மருதானையில் உள்ளவர் பார் கல்வி
பார்த்து நகரசபைக் கெங்கள் பாக்கீர்
பயனுடையாரென்றனிப்பிடுவோம்.
சிங்களம், ஆங்கிலம், செந்தமிழ் மூன்றையும்
சிங்கமெனச் சபை மீதெழுந்து பாக்கீர்
தங்கு தடையின்றி வீரம்செறிந்திடச்
சாற்ற வல்லா ரென்றனுப்பிடுவீர்.
அகில இலங்கை இஸ்லாமிய மாணவர்
அமைப்பின் இயக்கத்தலைவர் கண்டீர் பாக்கீர்
சீர் நாமமேலோங்கியே சாதி சிறப்புறச்
செய்திடும் உத்தமத் தொண்டர் கண்டீர்.
வெள்ளத்திலே அள்ளுப்பட்ட சனங்களை
மீட்டிங்கு காத்து மேல் பார்த்தவர் யார் பாக்கீர்
உள்ளத்திலே கள்ளம்மில்லாமல் சேவை உகந்து
புரிவோர் தெரிந்திடுவோம்.
பாராளுமன்றத்தில் ஏறி இருந்து
பணிகழாற்றவும் வல்லார் கண்டீர் பாக்கீர்
தாராள மனதுடன் சேவை செய் தென்றுமே
பணிவாக நடந்திடும் பண்பு கண்டீர்.
வண்டிச்சக்கரமாம் அடையாளத்தை
மாறின்றி எங்கள் மனதில் வைத்தே பாக்கீர்
கொண்டிடும் சக்கரம் பக்கத்தின் புள்ளடி
கூடிச்சென்றெல்லோரும் போட்டிடுவோம்.

என்றமைத்த முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி அவர்கள் பாக்கீரின் தேர்தல் வெற்றிக்காக பாடிய பாடல் வரிகளை, இலங்கையின் சுதந்திரப் பேற்றையொட்டி நிகழ்ந்த நாடு தழுவிய கவிதைப்போட்டியில் சோமசுந்தரப் புலவர் உள்ளிட்ட 58 புலவர்களைப் புறந்தள்ளி பரிசில் வென்ற அவரின்பாக்கீர் மீதான மேற் பாடலை, தேசிய கீதத்தைத் தமிழாக்கித் தந்த அப்பெரும் புலவர் பாக்கீர் மீது பாடிய அப்பாடல் வரிகளை நாமும் பாட வேண்டும் போறதோன்றுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப்புலமையையும், ஆளுமையையும் தனக்கு வழங்கிய நல்லாசான் நல்லதம்பிப் புலவரை எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டுபவர் பாக்கீர் மாக்கார்

**பாக்கீர் மாக்கார் தோல்வியடைந்த முதலாவது தேர்தலில் அவரின் வெற்றியை நாடி நின்றவர்களில் அவரின் தமிழ்ப் பேராசான் புலவர் மு.நல்லதம்பியும் ஒருவர். கடும் முயற்சி செய்து தமிழ் கற்பித்து உருவாக்கிய தன்னுடைய மாணவன் பாக்கீர் மாக்கார் பற்றி கவிதையொன்றையும் யாத்து பேருவளை மக்களின் நாவுகளில் தவிழ விட்டார் நல்லதம்பிப் புலவர். இன்றும் கூட பேருவளை ஊரின் முதியவர்களின் நாவுகளில் அப்பாடல் தவழ்கின்றது**



ஏ.எம். நஹியா...
B.A (Cey), P.G.D.E (U O Jaffna), M.Phil in Edu, (U.O.Jaffna) Cert.in Gen.Mgt.(SLIDA)
(முன்னாள் பணிப்பாளர் நாயகம்புனர்வாழ்வு;மீனவர் வீடமைப்பு மற்றும் மீனவர் நலன், முன்னாள் அரச சேவைகள் ஆணைக்குழு அங்கத்தவர்)

# 18 மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்கள் நியமனம்



## பிரதமரினார் நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

பிரதமர் தினேஸ் குணவர்தனவினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் (08) வழங்கப்பட்டன. பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் சாகர காரியவசம் எம். பியும் இணைந்து கொண்டார்.

இதன்படி, 18 மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதுடன், நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வருமாறு:

கொழும்பு – பிரதீப் உந்துகொட, கம்பஹா – சஹான் பிரதீப் விதான, களுத்துறை – சஞ்சீவ எதிரிமான்ன, காலி – சம்பத் அத்துகோரள, மாத்தறை – நிபுன ரணவக்க, அம்பாந்தோட்டை– சமல் ராஜபக்ஷ, குருணாகல் – சமந்திரிய ஹேரத், புத்தளம் – சிந்தக மாயாதுன்னே, அனுராதபுரம் – எச். நந்தசேன, கண்டி– குணதிலக்க ராஜபக்ஷ, மாத்தளை – நாலக பண்டார கோட்டேகொட, நுவரெலியா – எஸ்.பி. திஸாநாயக்க, பதுளை – சுதர்சன தெனிபிட்டிய, மொனராகலை – குமாரசிறி ரத்நாயக்க, இரத்தினபுரி – அகில எல்லாவல, கேகாலை – ராஜிகா விக்கிரமசிங்க, திகாமடுல்ல – டி. வீரசிங்க, திருகோணமலை – கபில அத்துகோரள ஆகியோர் நியமனக்கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

### மக்களின் வாழ்க்கை தரத்தை...

தருணம் எம் அனைவர் மீதும் உணரப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நேற்று தனது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, அமைச்சு பொறுப்புக்கள் அதிகாரங்களுடனான சுகபோகங்களை அனுபவிப்பதற்கு அல்ல. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எம் மீது சுமத்தப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு இதயசுத்தியுடன் உழைக்கும் உன்னத பொறுப்பேயாகும். இதனை நாம் கடமை உணர்வுடன் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அமைச்சு பொறுப்புக்களையும் அதிகார சுகபோகங்களையும் விட்டுவிட்டு மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென இந்த இடத்தில் கேட்டுக்கொள்கிறேன் என இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். அமைச்சர் நளீன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### பொருளாதார அபிவித்தியில் நாடு ...

எஸ்.எம்.எம்.முஷாரப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (08) உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டை சீரழித்தது இனவாதமாகும். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கொடிய யுத்தம் தோன்றுவதற்கு முன்பிருந்தே நாட்டில் உள்ள அனைத்து மக்களிடமும் இலங்கையர்கள் என்ற உணர்வு குறையத் தொடங்கியது. ஒரு சமூகத்திற்காக ஒரு இனத்திற்காக என அரசியல் செய்ய முற்பட்டோமோ அன்றிலிருந்து இந்த நாட்டினுடைய பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு போய்விட்டது . எனவே இனவாதமற்ற சூழ்நிலையை உருவாக்கினால் மாத்திரமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். அன்றி இந்த நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது என்ற யதார்த்தத்தை சகலஇன மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக எமது நாட்டிலே அரசியல் தலைவர்கள், இந்த இனவாதம் நாட்டை எவ்வாறு குட்டிச்சுவராக மாற்றியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே போர் குற்றங்கள் தொடர்பில் பேசப்படும் செப்டம்பர் மாதத்திலும் மார்ச் மாதங்களிலும் மாத்திரமே இனவாத பேச்சுக்கள் வரும். இது பற்றியே நாம் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருப்போம். அரசாங்கம் மேற்குலகுக்கு எதிராக நிற்கின்றதோ அப்போதெல்லாம் இலங்கை மிகவும் நெருக்கடியான சர்வதேச அழுத்தத்திற்கு உள்ளாகின்றது என்பதே யதார்த்தமாகும், என்றார்.

### வவுனியாவில் ஆலய...

ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று (09) ஆலயத்தில் கொடி இறக்குவதற்கான பூஜைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்த குழுவினருக்கும், ஆலயத்தில் நின்றவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், வாள் வெட்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன. இச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் வவுனியா வைத்தியசாலையல் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஆலய நிர்வாகனத்தினர் உட்பட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக சுமார் 20 பேர் நெளுக்குளம் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அந்த பகுதியிலிருந்து பொலிஸாரால் வாள்களும் மீட்கப் பட்டன.

இதேவேளை, ஆலய தலைவரை விடுவித்த பின்னரே ஆலயத்தின் கொடி இறக்கப்படும் எனத் தெரிவித்து அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்துக்கு முன் திரண்டு காணப் பட்டனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நெளுக்குளம் பொலிஸார் இதன்போது தெரிவித்துள்ளனர்.

### பிரிட்டனின் 2 ஆம் எலிசபெத்...

ஸ்காட்லாந்தின் பால்மரால் அரண்மனையில் தங்கியிருந்த அரசி எலிசபெத்தின் உடல்நலம் குறித்து மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவரது உடல்நிலை குறித்து அறிந்து, மகாராணியின் மகனும் பட்டத்து இளவரசருமான சார்ள்ஸ், அவரது மனைவி கமீலா, பேரன் வில்லியம் ஆகியோர் பால்மரால் விரைந்தனர். இந்நிலையில், எலிசபெத் காலமாகிவிட்டதாக பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதைத்தொடர்ந்து, பக்கிங்ஹாம் அரண்மனையில் ஏராளமானோர் கூடினர்.

மகாராணியின் உடல் நேற்று வெள்ளிக்கிழமை லண்டனுக்கு கொண்டு வந்து அஞ்சலிக்காக வைப்பதாக பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்தது. எலிசபெத்தின் கணவர் பிலிப் கடந்த ஆண்டு ஏப்ரல் 09ஆம்திகதி தனது 99 ஆவது வயதில் காலமானார்.

மகாராணியின் மறைவு பிரிட்டன் மட்டுமன்றி உலகம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டன் பெரும் நாடாக திகழ்வதற்கு அவர்தான் காரணம் என்றும் புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற லிஸ் டிரஸ் தெரிவித்தார்.

மகாராணி 02 ஆவது எலிசபெத்தின் மறைவையடுத்து, பட்டத்து இளவரசரான சார்ள்ஸ் (73) பிரிட்டனின் அடுத்த அரசரானார்.

பிரிட்டன் அரச வம்ச சட்டத்தின்படி மூத்த மகனும், இளவரசருமான சார்ள்ஸ் உடனடியாக அடுத்த அரசராக அறிவிக்கப்பட்டார். அவர் 03ஆவது சார்ள்ஸ் என இனி அழைக்கப்படுவாரென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாராளுமன்ற அமர்வு நேற்று...

அச்சமயம்வரை சபையில் 11 பாராளுமன்ற உறுப்பினர்களே பிரசன்னமாகியிருந்தனர்.

மே 9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற அமைதியற்ற சூழ்நிலையில் படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவின் அனுதாபப் பிரேரணை நேற்றைய தினம் சபையில் எடுத்துக்கொள்ளப்படவிருந்த வேளை, அதனை ஒத்தி வைத்து தேசிய சபையை அமைப்பதற்கான யோசனைக்கு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு ஆளும்கட்சி எதிர்பார்த்திருந்தது.

நேற்றைய தினம் முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது வழமையான பணிகள் ஆரம்பமாகியதுடன்,தேசிய சபையை அமைப்பதற்கான அறிவித்தல் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் அதனால் அமரர் அமரகீர்த்தியின் அனுதாபப் பிரேரணையை ஒத்திவைத்து தேசிய சபையை அமைப்பதற்கான யோசனைக்கு சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வோமென பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

அதன் போது அது தொடர்பான யோசனை தமக்குக் கிடைக்கவில்லையென சபாநாயகர் தெரிவித்ததையடுத்து தேசிய சபையை அமைக்கும் நடவடிக்கைகளும் தாமதமாகும் என்பதை குறிப்பிட்ட பிரதமர் தேசிய சபைக்கு விரைவில் சட்டபூர்வமான அனுமதியை பெற்றுக் கொள்வது அவசிமாகும் என்றும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து தேசிய சபை தொடர்பான அறிவித்தல் தமக்குக் கிடைத்ததும் அது தொடர்பில் சபையில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதுவரை சபையை ஒத்தி வைப்பதாகவும் குறிப்பிட்ட சபாநாயகர் அதற்கிணங்க 20ஆம் திகதி 9.30 மணி வரை சபை ஒத்திவைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.

### ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள்...

சாணக்கியனுக்கு இதற்கு பதில் கொடுக்க நான் விரும்பா விட்டாலும் கூட எனக்கு வாக்களித்த பெருவாரியான மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கேட்பதனால் நான் அவருக்கு பதில் வழங்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டை அழிக்க ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதம் ஏந்த அடித்தளமிட்டவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியினர் தான். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மட்டக்களப்பு தமிழ் மக்களின் சாபக்கேடு என சாணக்கியன் கூறியிருந்தார். அவருக்கு தெரியுமோ தெரியாது அவரின் பாட்டனார் மட்டக்களப்பு மாவட்டத்திலே பாலம் கட்ட வேண்டாம் சிங்களவன் வந்து விடுவான், கிராமங்களிலே குளம் அமைக்க வேண்டாம் சிங்களவன் வந்து குடியேறி விடுவான் உங்கள் பிள்ளைகளுக்கு சிங்களம் கற்பிக்க வேண்டாம் தனியே தமிழ் மட்டும் கற்பித்தால் போதும் "என்று கிராமம் கிராமமாக போய் முழங்கியவர். அப்படி முழங்கிய அவரது வாரிசுகள் ஆங்கிலமும் சிங்களமும் மட்டுமே நன்றாக பேசுகின்றனர்.

வட்டுக்கோட்டை தீர்மானம் எத்தகைய இரத்தக்களரியை ஏற்படுத்தியது என்பதனை மறந்து விட முடியாது. கிழக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வடக்கில் போய் போராட, அங்கிருந்து 05 இலட்சம் 10 இலட்சம் பேர் வெளிநாடுகளுக்கு போய் வாழ்கின்றபோது இரண்டாவது தலைமுறையை நோர்வேயிலும் ஐரோப்பாவிலும் போய் நீங்கள் சந்தித்துவிட்டு அவர்கள் உங்களுக்கு நிதி தருவார்களாம் என்று கூறுகிறீர்கள்.

தமிழரசுக்கட்சிக்காரர்களுக்கு நான் சவால் விடுகின்றேன். உங்களிடம் பேசியவர்களிடமிருந்து உங்களால் முடிந்தால் கிழக்கு மாகாணத்தில் 500 பேருக்கு வேலைவாய்ப்புக்கொடுத்தால் நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கு நான் தயார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் செய்த அபிவிருத்திகளையா சாபக்கேடு என்று கூறுகின்றீர்கள்?

எங்களோடு சேர்ந்து அரசியல் செய்து,ராஜபக்ஷ குடும்பத்தோடு நெருக்கமாக பழகி விட்டு இன்று வெல்வதற்காக தமிழரசுக்கட்சியில் சரணாகதி அடைந்து மேட்டுக்குடி தலைவர்களோடு யாழ்ப்பாணம் சென்று உண்டு மகிழ்ந்துவிட்டு இன்று எங்களை கைகாட்டிப்பேச உங்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது ?.

எமது கட்சியின் தேசிய மாநாட்டுக்கு யாரை அழைக்க வேண்டும் யாரை அழைக்கக்கூடாது என்பது எங்களது தீர்மானம். உங்களின் கடசியின் தலைவர் யார்? பொருளாளர் யார்? எதுவுமே தெரியாது. அந்தக் கட்சியிலிருக்கும் 'சாணக்கியனுக்கு பிள்ளையான் பற்றியோ பிள்ளையானின் கட்சி பற்றியோ பேச அருகதை கிடையாது. கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழனும் தனக்கான கட்சி அமைக்க வில்லை. ஆனால் நான் அமைத்தேன். வென்றாலும் தோற்றாலும் கொள்கை மாற மாட் டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரிட்டிஷ் மகாராணிக்கு...

பாராளுமன்றம் நேற்றுக்காலை 9.00 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.

பிரதமரின் விசேட கூற்றின்போது பிரதமர் தினேஷ் குணவர்தன பிரித்தானிய இரண்டாவது எலிசபெத் மகாராணியின் மறைவு தொடர்பான அனுதாபம் பாராளுமன்றத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்தார். எலிசபெத் பிரித்தானியாவின் மகாராணியாகவும் பொதுநலவாய அமைப்பின் தலைவராகவும் பதவி வகித்து வந்துள்ளார்.

அந்த வகையில் இலங்கை பாராளுமன்றத்தின் அனுதாபத்தை தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்த அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என பிரதமர் சபையில் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அமரத்துவமடைந்த எலிசபெத் மகாராணிக்கு பாராளுமன்றத்தில் அனுதாபம் தெரிவிப்பதற்காக விசேட தினமொன்றை ஒழுங்கு செய்யுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சியின் பிரதமகொரடா லக்ஷ்மன் கிரியெல்ல அனுதாபம் தெரிவித்தார்.

எலிசபெத் மகாராணி 1957 இல் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் பிரித்தானியாவின் இரண்டாவது மகாராணியாக நியமிக்கப்பட்டார். முழு உலகத்தினதும் மனதை வெற்றிகொண்ட தலைவியாக அவரைக் குறிப்பிட முடியும். அத்துடன் அவர் நம்அனைவருக்குமான முன்மாதிரியாகவும் குறிப்பிட முடியும்.

அந்த வகையில் மகாராணியின் மறைவுக்கு எதிர்க்கட்சியின் அனுதாபத்தை பாராளுமன்றத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

### பாராளுமன்றத்தில்...

என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்ட ஒப்பந்தம் தொடர்பாக நான் மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளேன். ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் அதனை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தாம் எதிர்க்கவில்லை எனவும், அதில் வரி தொடர்பான முக்கிய விடயங்கள் உள்ளதே பிரச்சினை எனவும் அவர் என்னிடம் தெரிவித்தார்" என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி இது தொடர்பில் விவாதத்திற்கு அழைப்பு விடுக்க உள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்த போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

“நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் நிலை ஒப்பந்தம் தொடர்பில் விவாதம் நடத்த விரும்புகிறோம், ஆனால் விவாதம் நடைபெறுவதற்கு முன்னர் அது சபையில் தாக்கல் செய்யப்பட வேண்டும்,” என்றும்லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

இந்த ஒப்பந்தம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபையில் சமர்ப்பிக்கப்படும் என அவைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். “நாங்கள் விரைவில் தேசிய பேரவையை நிறுவுவோம், அதன் பின்னர் IMF ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை முன்வைத்து கட்சித் தலைவர்களின் கருத்தைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பணியாளர் மட்ட ஒப்பந்தத்திலுள்ள முக்கியத் தகவல்களை விட்டுவிட வேண்டும், விவரங்களை அவையில் சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே முன்மொழிந்தார்.

### சுற்றுலாத்துறை... 03ஆம் பக்கத் தொடர்

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் என்ற வகையில், இலங்கையில் ஆற்றிய பணிகளுக்கு பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, அதற்காக தூதுவருக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

பதவிக்காலம் முடிந்து தான் இலங்கையை விட்டு வெளியேறினாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வதாக யூரி மேட்டரி இதன்போது உறுதியளித்தார். பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் முயற்சிகள் வெற்றிப்பெறுவதற்கும் அவர் வாழ்த்து தெரிவித்தார்.

### முறைப்பாடுகளை அரசிடம்... 03ஆம் பக்கத் தொடர்

முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நவம்பர் மாத நடுப்பகுதி அல்லது அதற்கு முன்னர் பதில் வழங்கப்படும் என வடமாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

### சீனாவிலிருந்து ... 03ஆம் பக்கத் தொடர்

கீழ் சுமார் பத்து இலட்சம் மாணவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகிறது, இந்த வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட 7,925 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுவதுடன் மேலும் இந்த வேலைத் திட்டம் இலங்கையின் மொத்த பாடசாலைகளின் 78% வீத பாடசாலைகளை உள்ளடக்கும் வித்தில் அமுல் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ADB மற்றும் JFPR... 03ஆம் பக்கத் தொடர்

திட்டத்துக்கான தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் கருவிகள் மற்றும் விவசாயம் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நிதி வழங்குவதற்கான பயனாளிகளின் தேர்வு, கண்காணிப்பு மற்றும் தொடர்பாடலை மேம்படுத்துதல், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் விவசாயிகளுக்கான நிதி, ஆலோசனை மற்றும் பிற சேவைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட திட்டம் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 க்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டத்துக்கான தொடர்புடைய கடன் ஒப்பந்தம், 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மற்றும் 03 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒப்பந்தம், இலங்கை அரசின் சார்பில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் வதிவிடப் பிரதிநிதி சென் சென்னும் நேற்று 09 ஆம் திகதி கையெழுத்திட்டனர்.

### மறைத்து வைக்கப்பட்டுள்ள... 03ஆம் பக்கத் தொடர்

ஆயுதமேந்திய படையினர் மற்றும் பொலிஸ் விசேட வாகனங்களையும் இதற்கு பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பாதாள உலகக் குழுவினரால் இவ்வாறான குற்றச் செயல்கள் வழிநடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, அண்மை நாட்களில் நடத்தப்பட்ட கொலைகள் மற்றும் துப்பாக்கிச்சூட்டு தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

### அரச நிறுவனங்களில்...

இதனைத் தெரிவித்ததாக பொது நிர்வாக மற்றும்

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் நீண்ட காலம் ஆட்சி செய்த மகாராணி இரண்டாம் எலிசபெத் காலமானதாக பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தது.

### அபிவிருத்திகளுக்கு...

கடந்த அரசாங்கங்களால் காலத்துக்கு காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அபிவிருத்திக்கு இடையூறாக இருக்குமாயின் அவற்றை உடனடியாக திருத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அலுவலகப் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னாயக்க, மின்வலு, எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

### ரயில் இருக்கை முன்பதிவு...

பயணிகளுக்கு உயர்தர சேவையை வழங்கும் நோக்கத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகபிரதிரயில்வேபொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார். இதன்படி எதிர்வரும் 13ஆம் திகதி காலை 10.00 மணி முதல் இக் கால நீடிப்பு அமுலாகும் என ரயில்வே பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

### அரிசி, பருப்பு, சீனியின்...

210 ரூபாவாக ஆக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 185 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 200 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை நாடு கிலோ ஒன்றின் விலை 194 ரூபாவாகவும், சிவப்பு பருப்பு ஒரு கிலோ 135 ரூபாவாகவும் குறைக்கப் பட்டுள்ளது.

### நாளொன்றுக்கு 10 மணிநேர...

நிலக்கரி கையிருப்பு கிடைக்காவிட்டால், மின்சார உற்பத்தியைக் குறைக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் அனல் மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறப்படுவதாகவும், மழைக் காலம் முடிவடையும் போது இலங்கையில் நீர் மின் உற்பத்தியில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், நுரைச்சோலை மின்நிலையத்தில் பழுதடைந்த ஜெனரேட்டரை மீள இயக்கி நவம்பர் 2022க்குள் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்க முடியும் என இலங்கை மின்சார சபை நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### நடிகை தமிதா சிறைச்சாலை ...

தமிதா அபேரத்னவை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பரிந்துரைத்துள்ளார்.

இதன்படி சிறைச்சாலை அதிகாரிகள் தமிதா அபேரத்னவை வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

### இலங்கைக்கு ஆதரவாக...

அமெரிக்காவின் வாஷிங்டனுக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விஜயம் செய்திருந்த போது, சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை தொடர்பில் முன்வைத்த பரிந்துரைகளையும் இதன்போது அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

# கிழக்கின் குரல்



## உள்ளூராட்சி சபைகளில் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இடமளிக்காதீர்

### தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ரெலோ கடிதம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



உள்ளூராட்சி மன்றங்களில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் எதிர்காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, கட்டுப்பாட்டுடனும் சரியான நிர்வாக அமைப்புடனும் செயல்படுவதன் அவசியம் குறித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரம் (ஜனா) வல்வெட்டித்துறை நகரசபை சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் என்ற தலைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். கடிதத்தின் பிரதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் மயூரன், தவிசாளர் தெரிவின் போது வாக்களிக்கத் தவறியமை தொடர்பில் எழுதப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வல்வெட்டித்துறை நகர சபையில் கடந்த முறை நகர சபையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினரின் மரணத்தினாலே ஒரு உறுப்பினருக்கான வெற்றிடம் ஏற்பட்டது. அந்த இடத்தை நிரப்புகின்ற தார்மீக உரிமை தமிழ்ஈழ விடுதலை இயக்கத்துக்கே இருந்தமையை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

மேற்படி வெற்றிடத்திற்கு தங்கள் கட்சியால் தொடர்ச்சியான கோரிக்கை முன் வைத்ததன் அடிப்படையில் தங்கள்கட்சி உறுப்பினர் மயூரன் அவர்களுக்கு நகரசபை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் பதவி ரெலோவுக்கே ஒதுக்கப்பட்டிருந்தது. ரெலோவின் தவிசாளராக இருந்த கருணானந்தராஜா அவர்கள் மரணித்த பின்பு தவிசாளர் தெரிவுகளில் குழப்பங்கள் ஏற்பட்டது.

23.08.2022 அன்று நடந்து முடிந்த வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் தெரிவிலே, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் பிரேரிக்கப்பட்டவருக்கே வெற்றி வாய்ப்பு உறுதியாகி இருந்த நிலையில் தங்களால் நியமிக்கப்பட்டமேற்குறிப்பிட்ட நபர் தவிசாளர் தெரிவில் வாக்களிப்பிற்கு சமுகம் கொடுக்காதலால் எமது கட்சி ஒரு வாக்கினாலே வெற்றி வாய்ப்பை தவறவிட்டமை மிகவும் வேதனையான விடயம்.

ஆகையால், தங்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே அவருக்கு எமது கட்சி சார்பில் பதவி வழங்கப்பட்டது என்பதை நினைவுறுத்தி உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம்,

1.அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை தாங்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும்

2.அவருடைய பதவி நிலையை வறிதாக்கி தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டுமென்றும் எமது கட்சியால் கோரிக்கை முன் வைக்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கந்தளாயில் தரம் 5 பரீட்சையில்

## சித்திபெற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் கௌரவிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கந்தளாய் தி/பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் எச்.எம். நௌசாட் தலைமையில் நடைபெற்றது.

தரம் 5 புலமைப் பரீட்சையில் இவ்வருடம் பாடசாலையின் ஒரு மாணவர் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.இதன் போது 16 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் வலய கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள் மற்றும் பொற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்

## காரைதீவில் குடைச்சாமி சித்தரின் திருவுருவச்சிலை பிரதிஷ்டை

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கில் சித்துக்கள் செய்து சமாதி அடைந்த குடைச்சாமி சித்தரின் திருவுருவச்சிலை இன்று (10) சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு காரைதீவில் பிரதிஷ்டை செய்து வைக்கப்படும்.

காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் குடைச்சாமி சித்தரின் சீடர் ஜீவாகரன் சுவாமி தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அழகான குடைச் சித்தரின் கற்சிலை அந்தணர்களால் இன்று பிரதிஷ்டை செய்து வைக்கப்படுகிறது.

இதனையொட்டி நேற்று வெள்ளிக்கிழமை அங்கு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் அன்னதானமும் யாகமும் இடம் பெற்றது.

## குச்சவெளியில் கள்ள நோட்டுகளை அச்சிட்ட இயந்திரங்களுடன் ஐவர் கைது

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை குச்சவெளி பொலிஸாரினால் கள்ள நோட்டுகளை அச்சிடுவதற்கு பயன்படுத்திய இயந்திரத்துடன் 5 பேரை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

குச்சவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கள்ள நோட்டுகளை பயன்படுத்தி பெட்ரோல் நிரப்பும் போது புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் பெறப்பட்ட தகவலை அடுத்து முல்லைதீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கள்ள நோட்டுக்களை அச்சிட பயன்படுத்திய இயந்திரத்துடன் ஐந்து பேரை கைது செய்துள்ளதாகவும் குச்சவெளி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் முல்லைதீவு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 21,23 மற்றும் 40 வயதுடைய மூவரும் குச்சவெளி சலப்பையாறு பகுதியைச் சேர்ந்த 23, 27 வயதுடையவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை விசாரணை செய்து வருவதாகவும் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குச்சவெளி பொலிசார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மாநகரசபையில் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு அஞ்சலி



மட்டக்களப்பு மாநகரசபையின் 64 ஆவது மாதாந்த அமர்வு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நேற்று (09) நடைபெற்றபோது, நேற்று முன்தினம் (08) மரணமடைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்)

## அதிரடிப்படையினருக்கு மருதமுனை நூர் பள்ளிவாசலில் விசேட துஆ

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

விசேட அதிரடிப் படையினரால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவையை நினைவு கூர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பிரார்த்தனை நிகழ்வு மருதமுனை மஸ்ஜிதுல் நூர் ஜும்மா பள்ளிவாசலில் அதன் தலைவர் எம்.ஐ.எம். முகர்ரப் தலைமையில் நேற்று (9) நடைபெற்றது.

இலங்கையில் விசேட அதிரடிப் படையினரின் சேவை ஆரம்பிக்கப்பட்டு 38 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கும் நிலையில், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படையினரால் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பொதுமக்கள் சேவையை பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசலின் இமாம் மௌலவி ஏ.ஆர். எம்.ஜெரிர் நிகழ்த்தினார்.

பெரியநீலாவணை விஷேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.எஸ்.ரட்நாயக்க தலைமையிலான குழுவினர் இங்கு வருகை தந்திருந்தனர்.

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு; கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை

### இலங்கை ஆசிரியர் சேவை சங்க பிரதித் தலைவர்

**ஒலுவில் விசேட நிருபர்**



2021 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை பரீட்சை திணைக்களம் வெளியிட்டிருந்த போதிலும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய ரீதியில் குறிப்பாக பரீட்சை திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் பரீட்சைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

எனினும் ஒதுக்கப்பட்ட மற்றும் அதற்கேற்ப வழங்குவதற்கென அனுமதிக்கப்படும் கொடுப்பனவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்துள்ள செலவினங்களை நோக்கும் போது வழங்கப்படும் கொடுப்பனவானது எவ்விதத்திலும் போதுமானது அல்ல. பொருளாதாரப் பிரச்சினைகள் மத்தியிலும் தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் செவ்வனே நிறைவேற்றிய ஆசிரியர்களுக்கு பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் பொறுப்பற்றுச் செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டில் நிலவும் கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மனம் தளராமல் கடமைகளை நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உரிய ஆசிரியர்களுக்கு உடனடியாக கொடுப்பனவு நிதியை ஒதுக்குமாறும் அவ்வாறு செய்யாதவிடத்து ஒன்றிணைந்த ஆசிரிய சங்கங்களாக இது தொடர்பாக மேலதிக செயற்பாடுகளை முன்னெடுப்போம் எனவும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இந்து இளைஞர் பேரவையால் ஆன்மீக பாத யாத்திரை



**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடாத்தும் மண்டூர் தொடக்கம் வெருகல் வரை இந்து சமய ஆன்மீக பாதயாத்திரை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை (9) காலை ஆரம்பமானது.

திருகோணமலை மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வெருகல் சித்திரவேலாயுத ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் ஆன்மீக பாத யாத்திரை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆன்மீக பாத யாத்திரையில் நூற்றுக்கு மேற்பட்ட மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை நகரில் மான்கள் சுற்றித்திரிவதால் அதிகரிக்கும் விபத்துக்கள்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**




திருகோணமலை கோனேஸ்வரா ஆலயத்தில் இருந்து மான்கள் திருகோணமலை நகர் புறத்துக்கு அதிகமாக வருவதினால் விபத்துக்கள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மான்களுக்கு உண்பதற்கு போதுமான உணவு இல்லாமையினாலேயே மான்கள் உணவைத் தேடி நகரை அண்மித்த பகுதியில் அங்குமிங்கும் அதிகளவில் நடமாடி வருகின்றது.

இதனால் வீதி விபத்துக்கள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் மான்கள் இறக்கும் வீதமும் அதிகரித்துள்ளது.

அத்துடன் திருகோணமலை பொது சந்தையில் காலையில் மான்கள் உணவைக் தேடி வருவதனையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இருந்த போதிலும் மான்கள் அங்கும் இங்கும் சுற்றித்திரிந்து பொலித்தீன்களையும் உட்கொண்டு வருகின்றதை அவதானிக்க கூடியதாகவும் எதிர்காலத்தில் மான்களை பாதுகாப்பதற்கு சிறந்த திட்டம் ஒன்றினை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் காட்டு யானையொன்று வியாழக்கிழமை இரவு உள் நுழைந்ததைக் காணலாம். (படம்: கல்முனை குறூப் நிருபர்)

## நற்பிட்டிமுனையில் தேசிய மரநடுகை



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலயத்தில் கல்முனை பொலிஸ் நிலையம் மற்றும் பாடசாலை நிர்வாகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய மர நடுகை நிகழ்வு நேற்று(9) பாடசாலை அதிபர்.வை.எல்.ஏ.பஷீர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக பிரதம அதிதியாக கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட்,பொலிஸ் பரிசோதகர் ஜே.எம்.ஏ. திசாநாயக்க, பிரதி அதிபர் சி.எம் நஜிப் உட்பட பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர் என பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 செப்டெம்பர் 10
சனிக்கிழமை

# யாழ்.மாநகர சபை திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு கனடா உதவி

**கோப்பாய் குறூப் நிருபர்**

கனடா சென்றுள்ள யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கனடா ரொறோன்டோ மாநகர முதல்வர் ஜோன் ரொரியை சந்தித்து யாழ். மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.



இக்கலந்துரையாடலில் ரொறோன்டோ மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவசார் நிபுணர் ஒருவரினை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கும் அவர் மூலம் யாழ்.மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் தொடர்பான பயிற்சிகளையும் அனுபவ பகிர்வுகளையும் வழங்குவதற்கான இணக்கப்பாட்டினை ரொறோன்டோ மாநகர முதல்வர் ஜோன் ரொரி வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் மிகவிரைவில் ரொறோன்டோ மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் நிபுணர் ஒருவர் யாழ்.மாநகர சபைக்கு விஜயம் செய்து பயிற்சிகளை முன்னெடுப்பார் என ரொறோன்டோ மாநகர முதல்வரால் உறுதியளிக்கப்பட்டது.

ரொறோன்டோ மாநகர முதல்வர் ஜோன் ரொரியுடனான சந்திப்பில் ரொறோன்டோ மாநகர சபை உறுப்பினர் ஜெனிவர் மக்கல்வியும் கலந்துகொண்டார்.





வரலாற்று சிறப்பு மிக்க செல்வ சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. காலை 9மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையை அடுத்து காலை 10 மணியளவில் சந்நிதியான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். நேற்றைய தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். படங்கள்: கரவெட்டி தினகரன் நிருபர்

# யாழ்ப்பாணத்தில் வீதி புனரமைப்புக்கு வைக்கப்பட்டிருந்த மணல், கற்கள் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வீதி புனரமைப்பு பணிகளுக்காக வீதியோரமாக குவிக்கப்பட்டிருந்த மணல் மற்றும் கற்களை திருடிய குற்றத்தில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், திருடப்பட்ட மணல் மற்றும் கற்களை மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சங்கரத்தை வீதி புனரமைப்பு பணிக்காக குவிக்கப்பட்டிருந்த 30 க்யூப் மணல் மற்றும் 15 கியூப் கற்கள் என்பன களவாடப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அங்கு களவாடப்பட்ட மணல் மற்றும் கற்கள் மானிப்பாய் அட்டகிரி எனும் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் திருடப்பட்டு, மறைத்து வைக்கப்பட்டிருந்த மணல் மற்றும் கற்களை மீட்டதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓவியக் கண்காட்சியும் நூல் அறிமுக விழாவும்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

அ.பங்கையற்செல்வனின் "உயிர்மை" ஒளி ஓவியக் கண்காட்சியும், "நிழல்கள் சொல்லும் கதைகள்" நூல் அறிமுக நிகழ்வும் இன்று காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்தமாக ஓவியக் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

ரி.பி ஹன்ற் ஞாபகார்த்தமாக ஓவியக் கூடத்தின் தாபகர் யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி அபிராமி, கோப்பாய் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் து.இளங்கோ, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் மற்றும் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜிதா சுனில் ஆரியரத்ன, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம், யா/போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், இயக்குநர் த.பேரரசன், தொழிலதிபர் ந.சிவகுமார், ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கருணாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையினை காவேரி கலாமன்ற நிறைவேற்று இயக்குநர் கலாநிதி ரி.எஸ் ஜோசுவா ஆற்றி நூலை அறிமுகம் செய்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.பல்கலையில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு ஆதரவு நிலையம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆதரவு நிலையமொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. கலைப்பீட கட்டடத் தொகுதியின் கீழ்த்தளத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதரவு நிலையம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

# மரத்திலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் பலி

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாதகல் பகுதியில் மரத்தின் கிளைகளை வெட்ட ஏறியவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். மாதகல் பகுதியை சேர்ந்த பாக்கியநாதன் ஜோசப் இமானுவேல் (வயது 66) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை மரத்தில் ஏறி கிளைகளை வெட்ட முற்பட்ட வேளையில் மரத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஸ்ரீ செல்வமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் 10ஆம் நாள் தேர்த்திருவிழா



மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரி அம்மன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை (09.09.2022) தேர்த்திருவிழா இடம்பெற்றது. ஆலயத்தின் பதினொரு நாட்களைக் கொண்ட மஹோட்சவத்தின் வெள்ளிக்கிழமை (09) பத்தாவது தேர்த்திருவிழாவில் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.
படம்: தலைமன்னார் விஷேட நிருபர்

# செட்டிகுளம் நீலியாமோட்டை கிராமத்தில் கவனயீர்ப்பு போராட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயற்திட்டத்தின் 40ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று (9)வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தின் நீலியாமோட்டை கிராமத்தில் நடைபெற்றது.



இச்செயற்திட்டத்தில் செட்டிகுளம் பிரதேச மக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாய, நன்னீர் மீனவ அமைப்புக்கள், என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை.

இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம், எமக்கு வேண்டும் எங்கள் நிலம், ஒன்று கூடுவது எமது உரிமை, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும், போன்ற பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

# தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி ராமேஸ்வரத்தில் வேலைநிறுத்த போராட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தபோராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மீனவர் சங்கங்களின் அவசர ஆலோசனை கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை (9) காலை நடைபெற்றது. இக் கூட்டத்தில் மீனவர் சங்க தலைவர்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர்.இந்த ஆலோசனைக்கு பின்னர் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை(9) முதல் போராட்டம் முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் படகுகளையும் உடனே விடுவிக்க வேண்டும், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்ட 115 படகுகளுக்கு தமிழக அரசால் ஐந்து லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது.

இதில் எஞ்சிய 7 படகுகளுக்கும் அதே அளவு சேதமடைந்த 30 படகுகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், வரலாறு காணாத டீசல் விலை உயர்வு காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது, தற்போது தமிழக அரசால் வழங்கி வருகின்ற 1800 லீற்றர் மானிய டீசல் 3000 லீற்றர் ஆக உயர்த்தி தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

# ஆலய திருவிழாவின் போது வாள்வெட்டு தாக்குதல்

## மூவர் படுகாயம், 20 பேரிடம் விசாரணை




**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலய திருவிழாவின் போது ஆலயத்திற்குள் இடம்பெற்ற வாள் வெட்டு மற்றும் அடிதடி காரணமாக மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை இச்சம்பவம் (09.09) இடம்பெற்றுள்ளது.

பொன்னாவரசன்குளம் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 10 தினங்களாக வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது. நேற்று (08.09) மாலை திருவிழாவின் போது ஆலயத்தில் நின்ற சிலருக்கும், ஆலய பகுதிக்கு வந்த பிறிதொரு குழுவினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று (09.09) ஆலயத்தில் கொடி இறக்குவதற்கான பூசைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்த குழுவினருக்கும், ஆலயத்தில் நின்றவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், வாள் வெட்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன. இச்சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய நிர்வாகத்தினர் உட்பட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக 20 பேர் வரையில் நெளுக்குளம் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டு அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்து பொலிஸாரால் வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆலய தலைவரை விடுவித்த பின்னரே ஆலயத்தின் கொடி இறக்கப்படும் எனத் தெரிவித்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக திரண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞர் பலி

**நாகர்கோவில் விஷேட நிருபர்)**

யாழில் வேகக் கட்டுப்பாட்ட இழந்து மோட்டார் சைக்கிள் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி கந்தர் மடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை(08) இரவு 9.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் கொக்குவில் கிழக்கை சேர்ந்த கிருஷ்ணகுமார் சரவணபவன் (வயது 32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருநெல்வேலி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கந்தர் மடத்தில் வீதியிலுள்ள வளைவு ஒன்றில் திரும்ப முற்பட்டபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மரத்துடன் மோதி பின்னர் மதிலுடன் மோதியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மரண விசாரணையினை மேற்கொண்டார்.




# ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கல் அதிகரிப்பு

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதத்தை அதிகரிக்கும் பணிகளை முன்னெடுக்குமாறு கல்வியியற் கல்லூரியின் ஆணையாளருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட உயர் கல்வி தரத்தை அதிகரிக்கும் நோக்கில் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதத்தை அதிகரிக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக கல்வி அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் 16ஆம் திகதி கல்வி அமைச்சரை நேரில் சந்தித்த செந்தில் தொண்டமான், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு தோட்டப்புற மாணவர்களை அதிகமாக உள்வாங்கப்படுவதற்கான விசேட பொறிமுறையொன்றின் அவசியத்தை விளக்கியிருந்தார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியால் 1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளை மாத்திரமே சேர்க்க முடியுமென்ற நிலைமை காணப்பட்டது. என்றாலும், காலப்போக்கில் இந்நிலைமை மாறி பெருந்தோட்ட மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதம் மிகவும் குறைந்தது.

இதன் பாரதூரத்தையும் பெருந்தோட்ட கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் ஏற்படுத்தப்பட வேண்டிய அணுகுமுறை மாற்றம் குறித்தும் கல்வி அமைச்சரின் கவனத்துக்கு செந்தில் தொண்டமான் கொண்டு சென்றிருந்தார். அதன்விளைவாக






அதற்கான விரைவாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவுகளை கல்வியமைச்சர் கல்வியியற் கல்லூரியின் ஆணையாளருக்கு பிறப்பித்துள்ளார். ஆரம்பத்தில் தாய் தந்தையரின் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் இலக்கங்களின் பிரகாரம் மாணவர்களை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு உள்வாங்கும் நடைமுறை பின்பற்றப்பற்றப்பட்டது. என்றாலும், தோட்டங்களில் அவுட்குரோவர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் அறவிடப்படுவது நிறுத்தப்பட்டது. இதனால் தோட்டப்புற மாணவர்கள் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் எண்ணிக்கை குறைவடைந்தது.

இந்தப் பொறிமுறையை மாற்றியமைக்கும் நோக்கில் தற்போதைய சூழ்நிலையில் கல்லூரிக்கான அனுமதியை பெற தாய் அல்லது தந்தையின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் மாத்திரம் உள்வாங்கப்படும் நடைமுறையுடன் தமது மூதாதையினர் தோட்டங்களில் பணிபுரிந்திருந்தால் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கட்டாயம் அனுமதியை வழங்க வேண்டுமென செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விரைவாக இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கல்வியியற் கல்லூரியின் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு கடிதம் மூலம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

# பெருந்தோட்ட கம்பனிகளின் அடக்குமுறையில் தொழிலாளர்கள் சிக்கித் தவிக்கின்றனர்

## இ.தொ.கா. பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் குற்றச்சாட்டு

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தோட்டத் தொழிலாளர்கள் பாரிய அடக்குமுறைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் இதனை சீரமைக்காவிட்டால் தோட்டங்களை பெருந்தோட்ட கம்பெனிகளிடமிருந்து மீட்க மக்கள் போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவ பிரதேச தோட்டங்களுக்கு தொழில் திணைக்கள அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொழிலாளர்களின் ஆகக்குறைந்த ஊதியம் ரூ.1000 என சம்பள நிர்ணய சபை நிர்ணயித்த போதும் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களின் ஊதியத்தை தாங்கள் நினைத்தபடி குறைத்து வழங்குகின்றன. தொழிலாளர்களுக்கு பறிக்கப்படும் கொழுந்து கிலோவுக்கு 40 ரூபா வீதம் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளர்கள் 8 மணி நேரத்துக்கு மேலதிகமாக தொழிலில் ஈடுபடுகின்றனர். ஓய்வு பெற்ற தொழிலாளர்களை குறைந்த கூலிக்கு வைத்துக்கொண்டு புதிய இளம் தொழிலாளர்களை வேலைக்கு சேர்த்துக் கொள்வதில்லை. தோட்டக் கம்பனிகளின் தான்தோன்றித்தனம் காரணமாக ஆண் தொழிலாளர்கள் வேறு தொழில்களை தேடி செல்கின்றனர். பெண் தொழிலாளர்கள் தேயிலை செடிகளுக்கு மேல் வளர்ந்து கிடக்கும் புட்களைக் அகற்றிக் கொண்டு தோட்டம் நிர்வாகம் கூறுகின்ற அளவுக்கு தேயிலைக் கொழுந்து பறிக்க நிர்பந்திக்கப்படுவதால். அவர்கள் உடல்ரீதியாக பாதிக்கப்படுவதோடு, குறைந்த சம்பளத்தை பெறும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தேயிலை செடிகளுக்கு உரமிடப்படுவதில்லை. புட்கள் அகற்றப்படுவதில்லை. தேவையான இரசாயன திரவங்கள் பாவிக்கப்படுவதில்லை. இவற்றுக்கெல்லாம் பொறுப்புக்கூற வேண்டிய தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து உழைப்பை சுரண்டி தமது இலாபத்தை ஈட்டுவதில் கண்ணும் கருத்துமாக செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ரயில் தண்டவாளத்தில் சிக்கி கை துண்டிப்பு

கண்டி – கொழும்பு ரயில் பாதையின் சுதுஹும்பால பகுதியிலிருந்து இரவு வேளையில் பயணித்த நபரொருவரின் கை துண்டிக்கப்பட்டு கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரயில் பாதையின் ஓரத்தில் விழுந்த சந்தர்ப்பத்தில், அப்போது பயணித்த ரயிலில், கை சிக்கி, கை துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கண்டி, தங்கொல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது உடலிலிருந்து துண்டான கை, ரயில் வீதியில் கிடப்பதை அவதானித்த பிரதேசவாசிகளால், நேற்றுமுன்தினம் (08) காலை 7.00 மணியளவில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து கையை கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். கையை இழந்த நபர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். கடந்த (07) இரவு 7.30 மணியளவில் ரயில் பாதையின் ஓரத்திலுள்ள பெரிய பள்ளத்தில் விழுந்துள்ளதுடன், அதிலிருந்து மேலே வருவதற்கு ரயில் தண்டவாளத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டதாகவும் இதன் போது ரயில் சிக்கி கை துண்டானதாக பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதன்போது, தண்டவாளத்திலிருந்து கையை வெளியே எடுக்க முயன்றபோது, திடீரென வந்த ரயிலில் தனது கை சிக்கிக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளதுடன், இருள் சூழ்ந்தமையால் கையில் இருந்து பிரிந்த பாகத்தை கண்டுபிடிக்க முடியாது போனதாகவும் இறுதியில் தனியாக வைத்தியசாலைக்குச் சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





வத்தேகம கல்வி வலய விக்னேஸ்வரா விஞ்ஞான பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டு விழா அதிபர் ஆர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக டப்ளிவ்.எம்.டீ.என். குணரட்ண கலந்துகொண்டார். இதன்போது பல்கலைக்கழகத்திற்கு பிரவேசித்த மாணவர்களும் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், மாணவத்தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள் புசல்லாவ தினகரன் நிருபர்)

# குப்பைகளால் களுகங்கை மாசு

**இரத்தினபுரி சூழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாநகர பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் முறையான சேகரிப்பு முறைக்கு ஏற்ப நடைபெறாமையால் அவை களுகங்கையில் கலந்து குடிநீருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. இரத்தினபுரி நகர மற்றும் சுற்று பிரதேசங்களிலிருந்து ஒதுக்கப்படும் சகல குப்பைகளும் சில பொது மக்களின் முறையற்ற செயற்பாடுகளினால் களுகங்கையில் வீசப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கொள்கலங்கள் ஒதுக்கப்படாமையால் அவை களுகங்கை நீருடன் கலந்து அதன் நீரை பருகும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பெரும் சுகாதார பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடத்தில் கவனயீனமாக குப்பைகளை வீசும் பொதுமக்கள் மீது உரிய தண்டனைகளை நடைமுறைப்படுத்தினால் இந்நிலைமை ஏற்படாது என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# தோட்டப்புறங்களில் குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிப்பு

தோட்டப்புறங்களில் வாழும் குழந்தைகளுக்கு உரியமுறையில் உணவுகள் கிடைக்காமையால் போசாக்கின்மை அதிகரித்துள்ளதாக ப்ரொடக்ட் அமைப்பின் உபதலைவர் கே. மைதிலி தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம் காரணமாக தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நாளாந்த சம்பளம் எந்தவகையிலும் போதுமானதாக இல்லை.

இன்று தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு, தொழிலாளர்கள் பிள்ளைகளுக்கு உணவளிக்கவோ அல்லது பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இவ்வாறான நிலைமைகள் காரணமாக தோட்டத்திலுள்ள பிள்ளைகள் போசாக்கின்மைக்குள்ளாகும் நிலை காணப்படுவதுடன் அவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏதாவது சலுகை வேலைத்திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தொழிற்சங்கங்கள் இது தொடர்பில் மௌனம் காப்பது வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்தார்.

# கலைப்பிரிவில் 3 ஏ சித்திகளை பெற்று பதுளை அல்–அதான். ம.வித்தியாலய மாணவி சித்தி

**பதுளை தினகரன் நிருபர்**

பதுளை அல்அதான் மகா வித்தியாலய (தேசியபாடசாலை) மாணவி எம்.ஏ. ரிஸ்லா கலைப்பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இஸ்லாமிய நாகரீகம், தமிழ்மொழி, அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்து சட்டபீடத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். மாணவி மாவட்ட மட்டத்தில் 18ஆம் இடத்தையும், அல்அதான் வரலாற்றில் முதல் தடவையாக அதிகப்படியான வெட்டுப்புள்ளியையும் (2.11.20) பெற்றுள்ளார். ரிஸ்லா ஆரம்ப வகுப்பு முதல் உயர் தரம் வரையில் தொடராக



முன்னிலை வகித்த மிகத் திறமைசாலி மாணவி. இவர் பதியத்தலாவை முஹம்மட் அஷ்ரப் (களுபோவில வைத்தியசாலை) பதுளுப்பிட்டிய ஜெஸ்மின் தம்பதியின் இளைய புதல்வியாவார்.





பதுளை மாநகர் அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் , ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பால்குட பவனி, நேற்று (2022 –09 –09) வெகுவிமர்சையாக நடைபெற்றது. பால்குட பவனியின் ஆரம்ப பூஜைகள் பதுளை ஓயா ஆற்றில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் பதுளை தினகரன் விசேட நிருபர்)

# நுவரெலியா மாவட்டத்துக்கு புதிய பிரதி பொலிஸ் மாஅதிபர்

நுவரெலியா மாவட்டத்தின் புதிய, பிரதி பொலிஸ்மா அதிபராக எச்.எஸ்.என்.பீரிஸ் பதவியேற்கும் நிகழ்வு நேற்று (08) நுவரெலியாவிலுள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது நுவரெலியா மாவட்டத்தில் பொறுப்பான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டு சர்வமதத்தலைவரின் ஆசீர்வாதத்துடன் பொறுப்பேற்றுக் கொண்டார்.



இதற்கு முன்னர் நுவரெலியாவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் இடமாற்றத்தை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், கண்டி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய இவர், தற்போது 1991 – 01 – 10 ஆம் திகதி முதல் நுவரெலியா நானுஓயா பொலிஸ் நிலையத்தில் பிரதான பொலிஸ் பரிசோதகராக பல வருடங்களாக கடமையாற்றியுள்ளார்.

1997 – 01 – 09. சுமார் 07 வருடங்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி யு உடுகமசூரிய, ஹற்றன் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜித டி அல்விஸ், நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகர் 01 சிறிவர்தன, நுவரெலியா ஹற்றன் பொலிஸ் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட பிரிவுகளுக்கு பொறுப்பான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபரை வரவேற்கும் நிகழ்வில், தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பஸ் தரிப்பிடமின்மையால் மக்கள் சிரமம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.**

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு செல்லும் சகல நோயாளர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக புகார் தெரிவிக்கின்றனர். கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் கனமழை பெய்து வருவதால் அங்கு செல்லும் நோயாளிகள் பஸ்தரிப்பிடத்தில் நிற்க முடியாத நிலையில் உள்ளதாக புகார் தெரிவிக்கின்றனர்.

தற்போது அங்குள்ள தரிப்பிடம் கோடைக்காலத்துக்கு உகந்ததாகவுள்ளது.

இருந்தாலும் கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள் அந்த தரிப்பிடத்தில் நிற்க முடியாத நிலையில் உள்ளது. வைத்தியசாலையில் இரு மருங்கிலும் நான்கு தரிப்பிடம் தேவை. இதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன் வந்து நிவர்த்தி செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# நகர்வலம்







பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தில் பஞ்ச ரதத் தேர்த்திருவிழா 9ஆம் திகதி இடம்பெற்றது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)



கொழும்பு 14 நவகம்புர அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தேர் திருவிழாவின்போது கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான காயத்ரி விக்கிரமசிங்க மற்றும் சுதர்சன் ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபட்ட போது எடுத்த படம்.





கொழும்பு கிராண்ட்பாஸ் சுவர்ண பைரவர் சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற ஸ்ரீ ஐயப்பன் சுவாமி ஆவணி திருவோண தின பூஜைகளின்போது அபிஷேகம், பதினெட்டாம் படி பூஜை, தீப ஆராதனை நடைபெற்றன. (படங்கள்: எம்.நசார்)





அன்னை லோகாம்பாள் அவர்களின் 108 ஆம் ஆண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு இலங்கை மணவளக்கலை மன்ற அறக்கட்டளை, கொழும்பு அறிவுத்திருக்கோயிலுடன் இணைந்து நடத்திய "மனைவி நலவேட்புவிழா 2022" கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதி அறிவுத் திருக்கோயில் புதிய கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கொழும்பு அறிவுத் திருக்கோயில் தலைவர் போராசிரியர் மதுரைவீரன், யாழ் அறிவுத்திருக்கோயில் அறங்காவலர் தலைவர் சி. முருகானந்தவேல் ஆகியோர் உரையாற்றுவதையும் மேடையில் அமர்ந்திருக்கும் விசேட தம்பதிகள் மாலை மாற்றி அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மணவளக்கலை மன்ற அங்கத்தவர்களையும் காணலாம்.

## இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலரின் அறிமுக நிகழ்வு

இனிய நந்தவனம் வெள்ளிவிழாமலரின் அறிமுக நிகழ்வு இலங்கையில் இடம்பெறவுள்ளது. இவ்விழா எதிர்வரும் 2022.09.18 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் இந்நிகழ்வு நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக தமிழக தொழிலதிபர் முகம்மது அபுபக்கர் சித்தீக், வீரகேசரி வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.ஆர்.பி. ஹரன், தினகரன், தினகரன் வாரம ஞ்சரியின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர், தமிழன் நாளிதழ் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். சிவராஜா,வீரகேசரி செய்திப் பிரிவுப் பணிப்பாளர் ஆர். பிரபாகரன், தினக்குரல் செய்தி ஆசிரியர் வே. கணேசன், தமிழ்மிரர் பிரதம ஆசிரியர் கனகராஜா, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ் சேவைப் பணிப்பாளர் இரத்தினசிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்வார்கள்.

செல்வி இனியவள் காண்டீபன் தமிழ்வாழ்த்துப்பாட, கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் ஆழ்வார் கந்தசாமி வரவேற்புரையாற்ற, ஞானம் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமையுரையாற்றுவார்.

கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, கவிஞரும் எழுத்தாளருமான முருகன் சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

எழுத்தாளரும் ஆய்வாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.



திருமதி ரஞ்சனி சுப்பிரமணியம் நூல் விமர்சன உரையாற்ற, இனியநந்தவனம் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையையும் நன்றியுரையையும் ஆற்றுவார்.

கலைஞானச்சுடர் சுபாசினி பிரணவன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார். கலாபூஷணம் பொன்னுத்துரை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்வார்.

## இம்ரான்கான் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

# இம்ரான் நீதிமன்றத்தில் மன்னிப்பு கோர வேண்டும்

### - சிரேஷ்ட சட்டத்தரணிகள் கருத்து

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையில் அவர் நிபந்தனையற்ற மன்னிப்பு கோராமல் எதிர்வாதம் செய்ய முற்பட்டால் அது அவருக்கு ஆபத்தாகவே முடியும் என பாகிஸ்தானின் சிரேஷ்ட சட்டத்துறை நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



இம்ரான்கான் முதல் தடவையிலேயே நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரியிருக்க வேண்டும் என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்தில் நீதிமன்ற அவமதிப்பு செய்தவருக்கு மன்னிப்பு வழங்கலாம் என்பதை சட்டம் உறுதியாக குறிப்பிடவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கும் பாக். உயர்நீதிமன்ற சட்டத்தரணி அக்ரம் ராஜா, விசாரணைக்கு எடுக்கப்பட்ட முதல் தடவையிலேயே மன்னிப்பு கோராத பட்சத்தில் பின்னர் அவரால் கோரப்படும் மன்னிப்பை ஏற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயம் நீதிமன்றத்துக்குக் கிடையாது என்றும் கூறியுள்ளார்.

இம்ரான்கானின் சட்டத்தரணிகள் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு எதிராக எதிர்வாதம் செய்வார்களானால் அது அவருக்கு அனுகூலமாக அமையாது என்று கருத்து தெரிவித்திருக்கும் உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரான ரஷீட் ரிஸ்வி, இம்ரான்கான் குற்றவாளி அல்ல என்ற வாதத்தை முன்வைத்தால் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரல் என்பதற்கே இடமில்லாமல் போய்விடும். எனவே எதிர்வாதம் செய்யாமல் இருப்பதே பாதுகாப்பானது என்று கூறியுள்ளார்.

இம்ரான்கான் எழுத்து மூல மன்னிப்பு கோருவதை விட அவர் நீதிமன்றத்தில் நேரில் தோன்றி தான் நடந்து கொண்டது தவறு என்றும் அதற்காக முழுமையான மன்னிப்பைக் கோருவதாகவும் நீதியரசர்கள் முன்னிலையில் அதற்கான உடல்மொழியுடன் தெரிவிப்பதன் மூலம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் இருந்து விடுவித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று இஸ்லாமாபாத் சட்டத்துறை வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது. எதிர்வாதம் செய்யாமல் மன்னிப்பு கோரினால் மட்டுமே விமோசனம் என்பது சட்டத்தரணிகளின் ஒருமித்தக் கருத்தாக உள்ளது.

# மாற்றுத் திறனாளிகளுக்கு தொலை நிகர்நிலை மருத்துவ சேவை; அவுஸ்திரேலிய - இந்திய தொலை மருத்துவ திட்டத்துக்கு விருது

இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் இணைந்து மேற்கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தொலை நிகர்நிலை மருத்துவ சேவைக்கு அவுஸ்திரேலிய இந்திய கவுன்சிலின் விருது வழங்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரால் அறிவிக்கப்பட்ட இந்த விருதினால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் இறுக்கமடையும் என தான் பெருமிதம் அடைந்திருப்பதாக தன் ட்விட்டர் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.




மாற்றுத் திறனாளிகளுக்கான தொலை மருத்துவசேவை ஒரு மாதிரித் திட்டமாக மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு இலகுவாக மருத்துவம் செய்ய முடிகிறது என்பது கொவிட் காலத்துக்கு முழு அடைப்புகளின் போது அறியப்பட்டது. இச் சேவையை பாராட்டும் வகையிலேயே அவுஸ்திரேலியா இந்தியா கவுன்சில் இவ் விருதை அளித்துள்ளது. இத்திட்டத்தில் இந்திய தொலை மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களின் பங்களிப்பை பாராட்டியுள்ள இத்திட்டத்துக்கான தலைவர் பேராசிரியர் நாதன் கிரில்ஸ், நவீன தொழில்நுட்பத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியா ஒரு பெரும் சக்தியாக விளங்குவதாக கூறியுள்ளார். தொலை மருத்துவத்தின் ஊடாக மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக சேவையாற்ற முடிகிறது என இவர் மேலும் கூறியுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு சேவையாற்றும் வகையில் 2018ம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை சிட்னி நகரில் செய்து கொள்ளப்பட்டது. இவ்விருதை வழங்கும் அவுஸ்திரேலிய இந்திய கவுன்சில் 30 வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மென்மேலும் நெருக்கமடைய இக்கவுன்சில் பங்களிப்பு செய்து வந்துள்ளது.

# இங்கிலாந்தின் புதிய பிரதமருக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து

இங்கிலாந்தின் புதிய பிரதமராக லிஸ் ட்ரஸ் பதவியேற்றிருப்பதைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்திருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான விரிவான மூலோபாய பங்களிப்புகள் மென்மேலும் நெருக்கமடையும் எனத் தான் எதிர்பார்ப்பதாக தன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் என்ற புதிய பதவியும் பொறுப்பும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.



உலகின் பழைமை வாய்ந்த ஜனநாயக நாடான இங்கிலாந்தில் நேரடித் தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் கட்சி தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள லிஸ் ட்ரஸ் அந்நாட்டின் மூன்றாவது பெண் பிரிட்டிஷ் பிரதமராவார். தன்னுடன் போட்டியிட்ட ரிஷி சுனக்கை இருபதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளால் தோற்கடித்து புதிய பிரதமராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு மே மாதம் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நடைபெற்ற நிகர்நிலை உச்சி மாநாட்டில் இரு நாடுகளுக்கு இடையிலான எதிர்கால வர்த்தக வாணிப உறவு தொடர்பான 2030 பயணப்பாதைத் திட்டம் அங்குரார்ப்பணமானது. புதிய உத்வேதகத்துடனான வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ரீதியான கூட்டுறவு தொடர்பாகவே இந்தப் பயணப்பாதை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு லிஸ் ட்ரஸ் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தபோது இப் பயணப்பாதை திட்டத்தில் விசேட அக்கறை காட்டியதோடு இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முன்னேற்றம் பற்றியும் கேட்டறிந்து கொண்டார். இந்த உடன்படிக்கை கடந்த ஜனவரி மாதமே முழு வடிவம் பெற்றது.

# வயல் எரிப்பால் ஏற்படும் புகை மாசு பஞ்சாபில் படிப்படியாக குறைவடைகிறது



இந்தியாவின் மிகப்பெரிய விவசாய மாநிலமாகக் கருதப்படும் பஞ்சாப்பில் அறுவடையின் பின்னர் வயல் வெளிகளில் காணப்படும் வேருடன் சேர்ந்த பகுதியை விவசாயிகள் எரித்துவிடுவதால் வளியில் பெருமளவும் புகைமாசு ஏற்படுவதால் அவ்வாறு செய்வதைத் தடுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பஞ்சாப் விவசாயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெல் மற்றும் கோதுமை அறுவடையின் பின்னர் நிலத்தில் மிகுந்திருக்கும் கதிர் எச்சங்களை எரித்துவிட்டு அடுத்த போகத்துக்கான ஆயத்தங்களை விவசாயிகள் மேற்கொள்வதே வழக்கம். இலட்சக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்தில் புகைமூட்டம் எழுந்து வளி மாசு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் தற்போது அது பஞ்சாபில் குறைந்து வருவதாக கூறப்படுகிறது.

47 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவு விவசாயக் காணிகளைக் கொண்டிருக்கும் பதன்கோட் மாகாணத்தில் 2017ம் ஆண்டில் இருந்து 2021 வரையிலான காலப்பகுதியில் 43 வயல்காணி எரிப்புகள் நடைபெற்றதாகவும் 2020இல் 6,600 ஹெக்டேயர்கள் எரியூட்டப்பட்டதாகவும் 2021ம் ஆண்டில் 4340 ஹெக்டேயர்களாக இது குறைந்திருப்பதாகவும், மாற்று ஏற்பாடுகள் வெற்றியளித்து வருவதையே இது காட்டுவதாகவும் விவசாயத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

எஞ்சியவற்றுக்கு எரியூட்டாமல் அவற்றை நிலத்துக்கே உரமாக்குவது ஒரு மாற்றுமுறை என்றும் பசுக்களை மேயவிடுவதன் மூலம் ஹெக்டேயருக்கு இரண்டாயிரம் ரூபா வரை இலாபம் பெற முடியுமென்றும் விவசாயிகளுக்கு உணர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் எரியூட்டல் படிப்படியாக பதன்கோட்டில் குறைந்து வருவதாகவும் விவசாய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக அறிவூட்டுவதற்கு சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இச்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை–பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆசியக் கிண்ண இறுதிப் போட்டி நாளை

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை (11) டுபாயில் நடைபெறவுள்ளது.

சுப்பர் போர் சுற்றில் சிறப்பாக ஆடிய இந்த இரு அணிகளும் நடப்புச் சம்பியனும், வெற்றி வாய்ப்பு அதிகம் இருந்த அணியுமான இந்தியாவை வெளியேற்றியே இறுதிப் போட்டிக்கு முன்னேறி உள்ளன.

பந்துவீச்சு மற்றும் மத்திய வரிசையில் அதிரடித் துடுப்பாட்ட வீரர்கள் பாகிஸ்தானின் பலமாக இருப்பதோடு துடுப்பாட்டம் மற்றும் சுழற்பந்து இலங்கை அணியின் பலமாக உள்ளது.

பாகிஸ்தான் அணி சுப்பர் போரில் ஆப்கானிடம் குறைந்த வெற்றி இலக்கை எட்டுவதில் போராடியது அதன் பலவீனங்களைக் காட்டுவதாக உள்ளது. குறிப்பாக அணித்தலைவர் பாபர் அசாம் ஓட்டங்களை பெறுவதில் தடுமாற்றம் கண்டு வருகிறார். எனினும் பாக். அணியின் சுழற்பந்து மற்றும் வேகப்பந்து இரண்டும் வலுவாக உள்ளது.

மறுபுறம் இலங்கை அணி ஆப்கானுடனான ஆரம்பப் போட்டியில் மோசமான தோல்வியை சந்தித்தபோதும் அடுத்தடுத்த போட்டிகளில் சவாலான வெற்றி இலக்குகளை துரத்தியது



துடுப்பாட்ட வரிசைக்கு நம்பிக்கை தருகிறது.

எனினும் சரித் அசலங்க தொடர்ந்து சோபிக்கத் தவறி வருகிறார். நேற்று நடந்த இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கடைசி சுப்பர் போர் போட்டியை தவிர்த்து அசலங்க ஆடிய நான்கு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 9 ஓட்டங்களையே பெற்றிருப்பதோடு அதனை அடைவதற்கும் 21 பந்துகளுக்கு முகம்கொடுத்துள்ளார்.

பந்துவீச்சில் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன மற்றும் புதுமுக வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும் டுபாய் ஆடுகளம் இரண்டாவது துடுப்பெடுத்தாடும் அணிக்கே சாதகமாக உள்ளது. பனி அதிக தாக்கம் செலுத்துவது இரண்டாவது பந்துவீசும் அணிக்கு சிரமமாக இருக்கலாம். எனவே நாணய சுழற்சி பெரும் தாக்கம் செலுத்தும்.

நேற்றைய போட்டி தவிர்த்து இலங்கை அணி பாகிஸ்தானுக்கு எதிரான டி20 போட்டிகளில் 13 ஆட்டங்களில் தோல்வி அடைந்திருப்பதோடு எட்டுப் போட்டிகளிலேயே வென்றுள்ளது. எனினும் இலங்கை கடைசியாக ஆடிய மூன்று டி20 போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளது.

## டயமண்ட் லீக்கில் யுபும் 5ஆம் இடம்

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் கடந்த வியாழக்கிழமை (08) நடைபெற்ற டயமண்ட் லீக் ஆண்களுக்கான 100 மீற்றர் இறுதிப் போட்டியில் இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் 5ஆவது இடத்தைப் பிடித்தார்.

உலக மெய்வல்லுனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான டயமண்ட் லீக் மெய்வல்லுனர் தொடரின் கடைசி சுற்று சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் உள்ள லெட்ஸ்டிகிரவுன்ட் அரங்கில் நடைபெற்றது.

இதில் யுபுன் 10.14 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தார். இதன்போது பிரிட்டனின் ரீஸ் ப்ரெஸ்கோட் மற்றும் கனடாவின் அன்ட்ரே டி கிராஸ் ஆகிய உலகின் முன்னணி குறுந்தூர ஓட்ட வீரர்களை யுபுன் அபேகோன் தோற்கடித்தமை சிறப்பம்சமாகும்.



அமெரிக்காவின் ட்ரவோன் ப்ரோம்மெல் 9.94 விநாடிகளில் போட்டியை முடித்து முதலிடத்தை பெற்று சம்பியனானார்.

## 1,021 நாட்களின் பின் கோஹ்லி முதல் சதம்



ஆசிய கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தனது கடைசி சுப்பர் போர் போட்டியில் இந்திய அணி 101 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றியீட்டியது. இதில் விராட் கோஹ்லி 1,021 நாட்களின் பின் சர்வதேச கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பெற்றார்.

33 வயதான கோஹ்லி கடைசியாக 2019 நவம்பர் 23 ஆம் திகதி பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் சதம் பெற்றிருந்த நிலையில், இந்தப் போட்டியில் 61 பந்துகளில் 122 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களுக்கும் 2 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்களை பெற்றது.

டுபாயில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 111 ஓட்டங்களையே பெற்றது.

எனினும் இரு அணிகளும் ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்கு தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட அணி இறுதிப் போட்டிக்கு தகுதி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் கடந்த புதன்கிழமை (07) நடைபெற்ற மாகாண மட்ட உதைபந்தாட்ட போட்டியின் அரையிறுதியில் அம்பாறை மாவட்டம் சார்பில் அக்கரைப்பற்று அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்த அரையிறுதிப்போட்டி அம்பாறை மாவட்ட தெரிவு அணி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

இப்போட்டியின் முதல் பாதியில் 2–1 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு தெரிவு அணி முன்நிலை வகித்தது. எனினும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் மிகச் சிறப்பாக விளையாடிய அம்பாறை அணியினர் மேலும் 2 கோல்களை புகுத்தி 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டனர்.

எம். ஜரீத், எல்.பீ. முஹைமீன் மற்றும் அப்துல் மாஜீத் ஆகியோர் தலா ஒரு கோலை புகுத்தி அணியின் வெற்றிக்கு உதவினர்.

## தோல்வியுறாத அணியாக இலங்கை அரையிறுதியில்

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியின் இரண்டாவது சுற்றின் கடைசி ஆட்டத்திலும் ஹொங்கொங் அணியை 52–51 புள்ளிகளால் வென்ற இலங்கை அணி தோல்வியுறாத அணியாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (08) நடைபெற்ற ஹொங்கொங்கிற்கு எதிரான போட்டியின் நான்கு கால் பகுதிகளிலும் இலங்கை அணி தெளிவான முன்னிலையை பெற்றது. இதன்படி அந்த அணி 20–9, 37–22, 48–38 மற்றும் 62–51 என முன்னிலை பெற முடிந்தது.

முன்னதாக இலங்கை வலைப்பந்தாட்ட அணி இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் சிங்கபூர் அணிகளை வீழ்த்தி இருந்தது.



இதன்படி இலங்கை அணி இன்று சனிக்கிழமை நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் மீண்டும் ஹொங்கொங் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

மற்ற அரையிறுதியில் சிங்கப்பூர் மற்றும் மலேசிய அணிகள் மோதவுள்ளன.

## போட்டியில் மோதிக்கொண்ட ஆசிப்–பரீட்டுக்கு அபராதம்

ஆசிய கிண்ண சுப்பர் போர் போட்டியின்போது மைதானத்தில் மோதலில் ஈடுபட்ட பாகிஸ்தானின் ஆசிப் அலி மற்றும் ஆப்கான் பந்துவீச்சாளர் பரீட் அஹமட் அலிக்கு போட்டிக் கட்டணத்தில் 25 வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை (07) நடந்த இந்தப் போட்டியின்போது இருவரும் ஐ.சி.சி ஒழுக்காற்று விதி நிலை 1ஐ மீறியதற்காகவே இவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பாகிஸ்தான் பதிலெடுத்தாடியபோதும் 19ஆவது ஓவரின் ஐந்தாவது பந்தில் ஆசிப் அலி ஆட்டமிழந்த பின்னரே இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட இரு வீரர்களும் போட்டி மத்தியஸ்தர் அன்டி பைக்ரோப்ட் விதித்த தண்டனையையும் ஏற்றுக்கொண்டனர்.



பெரும் பரபரப்புடன் நடந்த இந்தப் போட்டியின் முடிவில் அரங்கில் இருந்த ரசிகர்களும் கலவரத்தில் ஈடுபட்டதோடு ஆப்கான் ரசிகர்கள் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## இலங்கை இளையோர் அணி தொடர் தோல்வி



இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணியுடனான இரண்டாவது இளையோர் ஒருநாள் போட்டியில் டக்வர்த் லுவிஸ் முறையில் 7 விக்கெட்டுகளால் வென்ற இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 2–0 என வெற்றி பெற்றது.

வொர்செஸ்டரில் கடந்த வியாழக்கிழமை (08) நடைபெற்ற இந்தப் போட்டி மழையின் குறுக்கீட்டுடனேயே இடம்பெற்றது. இதனால் 35 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 211 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப வீரர் ஹசித்த அமரசிங்க 71 ஓட்டங்களை பெற்றதோடு மத்திய வரிசையில் ரனுத சோமரத்ன 81 ஓட்டங்களை குவித்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இங்கிலாந்து இளையோர் அணி 31.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மத்திரம் இழந்து 202 ஓட்டங்களை பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டதால் டக்வர்த் லுவிஸ் முறையில் இலகு வெற்றியை ஈட்டியது.

### டி20 உலகக் கிண்ணம்:

## பயிற்சிப் போட்டி விபரம் வெளியீடு



அவுஸ்திரேலியாவில் வரும் ஒக்டோபரில் நடைபெறவுள்ள ஐ.சி.சி டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் 16 அணிகளின் பயிற்சிப் போட்டி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிப் போட்டிகள் அனைத்தும் மெல்போர்ன்மற்றும்பிரிஸ்பானில் நடைபெறவுள்ளன. முதல் சுற்றில் ஆடும் அணிகள் ஒக்டோபர் 10 மற்றும் 13ம் திகதிகளுக்கு இடையில் பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளன. சுப்பர் 12 சுற்றில் நேரடியாக ஆடும் அணிகள் வரும் ஒக்டோபர் 17 மற்றும் 19 ஆம் திகதிக்கு இடையே தமது பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ளன.

இதில் இலங்கை அணி தமது பயிற்சிப் போட்டிகளில் வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி சிம்பாப்வேயையும், 13ஆம் திகதி அயர்லாந்து அணியையும் எதிர்கொள்ளவுள்ளது.

இந்தப் பயிற்சிப்போட்டிகள் சர்வதேச டி20 போட்டிகளாக அங்கீகாரம் அளிக்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

## சதுரங்க போட்டி: கல்முனை ஸாஹிரா கல்லூரி சம்பியன்



கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் சதுரங்க போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி முதலிடம் பெற்று சம்பியனாக தெரிவானது.

ஸாஹிரா கல்லூரி காரியப்பர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பிரிவிலேயே ஸாஹிரா சம்பியனானது. அதேபோன்று அந்தக் கல்லூரி 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்து தேசிய மட்டத்திற்கு தெரிவானது.

மேலும் தனித்திறமைக்கான தெரிவில் 20 வயதுக்குட்பட்ட பிரிவில் ஏ.எச்.எம்.ஏ. சிமாம், எம்.எச்.எம். நுஸ்ரத் மற்றும் எம்.ஏ.ஏ. அத்தீப் ஆகிய மாணவர்களும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் எம்.ஏ. தமீம், எம்.இசட்.எம். சனீப் ஆகிய மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# புதிய இராஜாங்க அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்


**ரஞ்சித் சியம்பலாபிட்டிய** – நிதி


**ஜகத் புஷ்பகுமார** – வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு


**லசந்த அலகியவண்ண** – போக்குவரத்து


**திலும் அமுனுகம** – முதலீட்டு ஊக்குவிப்பு


**கனக ஹேரத்** – தொழில்நுட்பம்


**ஜனக்க வக்கும்புர** – மாகாண சபைகள்,உள்ளூராட்சி


**ஷெஹான் சேமசிங்க** – நிதி


**மொஹான் பிரியதர்சன டி சில்வா** – விவசாயம்


**தேனுக விதானகமகே** – நகர அபிவிருத்தி,வீடமைப்பு


**பிரமித்த பண்டார தென்ன கோன்** – பாதுகாப்பு


**ரோஹண திசாநாயக்க** – விளையாட்டு,இளைஞர் விவகாரம்


**அருந்திக்க பெர்ணான்டோ** – நகர அபிவிருத்தி,வீடமைப்பு


**விஜித்த பேருகொபிரிவேனா** – கல்வி


**லொஹான் ரத்வத்தை** – பெருந்தோட்டக் கைத்தொழில்


**தாரக்க பாலசூரிய** – வெளிவிவகாரம்


**இந்திக்க அனுருத்த** – மின்வலு, எரிசக்தி


**சனத் நிசாந்த** – நீர் வழங்கல்


**சிறிபால கம்லத்** – நெடுஞ்சாலைகள்



**சாந்த பண்டார** – வெகுஜன ஊடகம்


**அநுராத ஜெயரத்ன** – நீதி, சிறைச்சாலை மறுசீரமைப்பு


**எஸ்.வியாழேந்திரன்** – வர்த்தகம்


**சிசிர ஜெயக்கொடி** – சுதேச மருத்துவம்


**பியல் நிசாந்த டி சில்வா** – மீன்பிடி


**பிரசன்ன ரணவீர** – சிறு, மத்திய தொழில் முயற்சி


**டீ.வி சானக்க** – வனஜீவராசிகள், வனவளப் பாதுகாப்பு


**டீ.பி.ஹேரத்** – கால்நடை அபிவிருத்தி


**சசீந்திர ராஜபக்ஷ** – நீர்ப்பாசனம்


**மருத்துவர் சீதா அரம்பேபொல** – சுகாதாரம்


**காதர் மஸ்தான்** – கிராமிய பொருளாதாரம்


**அசோக்க பிரியந்த** – உள்நாட்டலுவல்கள்


**அரவிந்த குமார்** – கல்வி


**கீதா குமாரசிங்க** – மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம்


**சிவநேசத்துரை சந்திரகாந்தன்** – கிராமிய வீதி அபிவிருத்தி


**கலாநிதி சுரேன் ராகவன்** – உயர் கல்வி


**டயனா கமகே** – சுற்றுலாத் துறை


**சாமர சம்பத் தஸநாயக்க** – ஆரம்பக் கைத்தொழில்


**அனுப பியும் பஸ்குவல்** – சமூக வலுவூட்டல்




# SLIM Brand Excellence Awards 2022க்கான புதிய விருது மதிப்பீடு வெளியிடப்பட்டது




இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM), சவாலான சூழ் நிலைகளுக்கு மத்தியிலும் தமது செயற்திறனைப் பெற்ற நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக 21வது SLIM Brand Excellence Awards 2022 ஐ 2022 ஆகஸ்ட் 22ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இந்த ஆண்டு Mettle of Resilience எனும் இலச்சினை அடிப்படையில் புத்தம் புதிய மதிப்பீட்டு செயல்முறையை அறிமுகப்படுத்துகிறது. செப்டம்பர் 5ஆம் திகதி ஜேக் ஹில்டனில் நடைபெற்ற நிகழ்வில் இதுதொடர்பான மேலதிக விளக்கம் அளிக்கப்பட்டது.

மூலோபாயம், படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் மூலோபாய பயன்பாட்டினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளில் வெற்றிகரமாக வாடிக்கையாளர் தடம்பதித்துள்ள வர்த்தக நாமங்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக ஐந்து வர்த்தக நாம விருதுகள் மற்றும் பத்து சிறப்பு விருதுகளை வழங்குவதை SLIM வாடிக்கையாளர் நோக்கமாக கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் நுவன் கமகே, இந்த அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டவர்களை வரவேற்றதுடன், தற்போதைய பிரச்சினைகளுக்கு நேரடித் தீர்வாக இலங்கையின் வர்த்தக நாமத்தை முன்னெடுத்துச் செல்ல சந்தை முகவர்கள் முன்வர வேண்டுமென வலியுறுத்தினார். நடுவர் குழுவின் தலைவர் இமால் பொன்சேகா மற்றும் திட்டத் தலைவர் கவி ராஜபக்ஷ ஆகியோர், முன்னோக்கிச் செல்வதற்கான செயல்முறை மற்றும் இரண்டாவது சுற்று சமர்ப்பிப்புகளை ஆதரிக்கும் சமீபத்திய மதிப்பீட்டு அளவுகோல்கள் குறித்தும் விளக்கமளித்தனர்.

அதிகாரப்பூர்வ கிரியேட்டிவ் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட "உங்கள் கதையை எப்படி சரியாக எழுதுவது" என்ற கருப்பொருளைக் கொண்ட உத்தியோகப்பூர்வ டிஜிட்டல் பங்குதாரர் Loops "உங்கள் வாடிக்கையாளர்களின் கவனத்தைப் பெறுதல்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இரண்டு அமர்வுகளால் இந்த நிகழ்வு அலங்கரிக்கப்பட்டது.

விற்பனையாளர்களுக்கு அவர்களின் வர்த்தக நாமக் கதையை சிறப்பாக வடிவமைக்க உதவுவதையும், சலுகையில் விரும்பப்படும் விருதுகளை வெல்வதற்கு என்ன டிஜிட்டல் மதிப்பீடுகளை கண்காணிக்க வேண்டும் மற்றும் வழங்க வேண்டும் என்பதையும் அவர்கள் மேலும் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஐந்து முக்கிய விருது வகைகளில் ஆண்டின் தயாரிப்பு வர்த்தக நாமம், ஆண்டின் சேவை வர்த்தக நாமம், ஆண்டின் உலகளாவிய வர்த்தக நாமம், ஆண்டின் உள்நாட்டு வர்த்தக நாமம் மற்றும் ஆண்டின் ஏற்றுமதி வர்த்தக நாமம் ஆகியவை அடங்கும்.

இந்த ஆண்டில் சேர்க்கப்பட்ட பத்து சிறப்பு விருதுகளில், ஆண்டின் புத்தாக்கமான வர்த்தக நாமம், ஆண்டின் சிறந்த புதிய வர்த்தக நாமம், ஆண்டின் சிறந்த புதிய நுழைவாளர், ஆண்டின் B2B வர்த்தக நாமம், ஆண்டின் CSR பிராண்ட், ஆண்டின் ஆன்லைன் வர்த்தக நாமம், SME உள்ளூர் வர்த்தக நாமம் ஆண்டுக்கான SME ஏற்றுமதி வர்த்தக நாமம் மற்றும் இரண்டு புதிய பிரிவுகளான ஆண்டுக்கான சுறுசுறுப்பான வர்த்தக நாமம் மற்றும் கிரீன் வர்த்தக நாமம் அகியன உள்ளடங்கும்.

அனைத்து உள்ளீடுகளும் நாட்டின் மிகவும் மரியாதைக்குரிய, அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் தீர்மானிக்கப்படுகின்றன. அவர்கள் மிகவும் பொருத்தமான பிராண்டுகள், பிராண்ட் பாதுகாவலர்கள் மற்றும் தொழில்முனைவோரை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு நுட்பமான மற்றும் துல்லியமான மதிப்பீட்டு நடைமுறையைப் பின்பற்றுகிறார்கள்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும் HNB FINANCE



HNB FINANCE PLC இன் நாவலப்பிட்டி கிளையானது நாவலப்பிட்டி மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் விசேட வேலைத்திட்டத்தை கடந்த ஆகஸ்ட் 5 ஆம் திகதி ஆரம்பித்தது.

இதன்போது நாவலப்பிட்டி கிளையின் அனைத்து ஊழியர்களின் பங்களிப்புடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 500 சமைத்த உணவுப் பொதிகள், உலர் உணவுப் பொருட்கள், உடைகள் மற்றும் அத்தியாவசிய சுகாதாரப் பொருட்கள் வழங்கப்பட்டன.

“தொடர்ந்து பல நாட்களாக பெய்த அடைமழை காரணமாக நாவலப்பிட்டி பகுதியில் உள்ள தோட்டங்கள் மற்றும் நகரங்களை அண்டிய வீடுகளில் வசித்த சிலர் உயிரிழந்துள்ளதுடன் பெருமளவிலான மக்களின் வீடுகள் பாரிய சேதங்களுக்கு உள்ளாகின. இந்நிலைமைக்கு உடனடியாகப் நடவடிக்கை எடுத்த HNB FINANCE நாவலப்பிட்டி கிளையிலுள்ள எமது முழு ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு அமைப்பாக எங்களின் நோக்கம் வாழ்க்கையை மேம்படுத்துவதே ஆகும், குறிப்பாக இதுபோன்ற அணர்த்த காலங்களில் அப்பகுதி மக்களுக்கான சிறந்த பணியை நிறைவேற்றுவதில் நாங்கள் எப்போதும் ஆர்வமாக உள்ளோம்.” என HNB FINANCE PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் கூறினார்.

# இரண்டாம் காலாண்டில் 19.8% சந்தைப் பங்குடன் முதலிடத்தை பெறறுள்ள முன்னணி ஸ்மார்ட்போன் வர்த்தகநாமமான vivo



கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட Counterpoint Research இன் Market Pulse அறிக்கையின் படி, vivo 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 19.8% சந்தைப் பங்குடன் முதலிடத்தை பெற்றமையின் மூலம், முன்னணி உலகளாவிய ஸ்மார்ட்போன் வர்த்தகநாமமாக அதன் நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

vivo, பெரும்பாலும் உலகளாவிய மற்றும் உள்ளூர் அணுகுமுறையைப் பின்பற்றி, உள்ளூர் கலாச்சாரத்தைப் பற்றிய புரிதலை வளர்த்து, உலகம் முழுவதும் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது.

தற்போது, vivo அதன் விற்பனை வலையமைப்பை 50 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் வியாபித்துள்ளதுடன், பல்வேறு விலை மட்டங்களில் உலகளவில் 400 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களைக் கொண்டுள்ளது.

vivo Sri Lanka வின் பிரதான நிறைவேற்று அதிகாரி கெவின் ஜியாங், Q2 2022 விற்பனை முடிவுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், vivoவின் பலதரப்பட்ட ஸ்மார்ட் போன்களானது வர்த்தகநாமத்துக்கு சந்தையில் ஒரு நல்ல பங்கைப் பெற உதவியதுடன், அதன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த உதவியது.

இந்த வர்த்தகநாமம் அதன் தெளிவான தகவல் வழங்கல் மற்றும் புதுமையான பிராந்திய மூலோபாயம் காரணமாக இந்த வேகத்தை அடைந்துள்ளது. மேலும், இந்த வர்த்தகநாமம் அதன் பட்ஜட் பிரிவுக்கு, குறிப்பாக இளைய வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தை அதன் மையமாக கொண்ட வர்த்தகநாம நம்பிக்கையுடன், vivo ஒரு வலுவான வேகத்தை பராமரித்து, பிராந்தியங்களில் உள்ள தனது வாடிக்கையாளர்கள் மற்றும் ரசிகர்களின் அன்பிற்கும் ஆதரவிற்கும் தகுதியானது என்பதை நிரூபித்துள்ளது.

இந்த நுகர்வோரை மையமாகக் கொண்ட வர்த்தகநாமம் அதன் X, V மற்றும் Y தொடர்களின் காரணமாக இந்த வெற்றியை அடைந்துள்ளதுடன், அவை அண்மையில் பிராந்தியங்களில் மிகவும் பிரபலமாக உள்ளன.

X தொடர், அதன் கெமராவை மையமாகக் கொண்ட புத்தாக்கம் மற்றும் ZEISS உடனான பங்குடமை, V தொடர், அதன் சீர்தன்மை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் Y தொடர் அதன் பட்ஜெட் பிளாக்ஷிப் அனுபவத்துடன் இளைஞர்களின் ஆர்வத்தைப் பெற உதவின.

## செலான் வங்கி ஹேலீஸ் சோலருடன் கைகோர்த்து

# சூரிய வலுப் பிறப்பாக்கலுக்கு இலகு தவணை முறை மீளச் செலுத்தும் திட்டம் அறிமுகம்

வாடிக்கையாளர்கள் சௌகரியமான தீர்வுகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கும் வகையில் ஹேலீஸ் சோலருடன் செலான் வங்கி பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. இதனூடாக சூரிய மின்பிறக்கல் கட்டமைப்புகளை கொள்வனவு செய்வதற்காகா இலகு தவணை முறை மீளுச் செலுத்தும் வசதியை செலான் அட்டைதாரர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாகவும் அதிகரித்துச் செல்லும் மின்சார கட்டணங்களின் காரணமாகவும்இ சூரிய மின்சக்தி சிறந்த பொருத்தமான மாற்றுத் தீர்வாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும்இ சூரியபடல்களைப் பொருத்துவதற்கான உயர்ந்த கட்டணங்கள் காரணமாக மக்கள் இந்த மாற்றுத் தீர்வை பயன்படுத்த முன்வருவதில்லை. ஹேலீஸ் சோலருடன் செலான் வங்கியின் பங்காண்மையினூடாக பொது மக்களுக்கு சூரிய மின்வலுவுக்கு மாறிக் கொள்வது சகாயமான தெரிவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் அட்டைகள் பிரிவின் தலைமை அதிகாரி ருச்சித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில் “அத்தியாவசிய தேவைகளுக்கானஇ அத்தியாவசிய அட்டையான செலான் கார்ட்ஸ்இ எமது வாடிக்கையாளர்களின் அத்தியாவசிய நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் எப்போதும் கவனம் செலுத்துகின்றது. அவர்களுக்கு எவ்வாறு சௌகரியமான தீர்வுகளை வழங்க முடியும் என்பது தொடர்பான வழிமுறைகளை தொடர்ச்சியாக இனங்காண முயற்சி செய்கின்றோம். விசேடமாக இந்த நெருக்கயான காலப்பகுதியில் செலான் கார்ட்ஸ் ஊடாக பரந்தளவு தீர்வுகள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களின் நிதிச் சுமையை தணிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. மேலும் நிலைபேறாண்மை அடிப்படையில் இந்த நடவடிக்கையினூடாக பெருமளவான மக்களுக்கு புதுப்பிக்கத்தக்க வலுவுக்கு மாறிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் இதனூடாக காபன் வெளியீட்டைக் குறைக்க முடியும் என்பதுடன் மசகு எண்ணெய் இறக்குமதிக்கான செலவைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில் இந்த நிலைபேறான வலு மூலங்களை பல இலங்கையர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றியமைப்பது எமது கடமையாகும். அதனூடாக நீண்ட கால அடிப்படையில் வலுப் பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும்.” என்றார்.

செலான் வங்கி மற்றும் ஃபென்டன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க வலுப் பிரிவான ஹேலீஸ் சோலர் ஆகியவற்றுக்கிடையிலான பங்காண்மை என்பதனூடாக இந்த இணைந்த செயற்பாட்டின் உறுதித்தன்மைக்கு வலுச் சேர்த்துள்ளன. புதுப்பிக்கத்தக்கவை மற்றும் வலு சேகரிப்பு கட்டமைப்புகள் போன்றவற்றில் ஹேலீஸ் சோலர் பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. ஒரு தசாப்த காலத்துக்கும் அதிகமான சந்தைச் சிறப்புடன் நிறுவனம் வெற்றிகரமாக 75ஆறு சூரிய மின்பிறப்பாக்கல் கட்டமைப்புகளை நாடு முழுவதிலும் பொருத்தியுள்ளது. இதனூடாக இலங்கையில் பொறியியல் கொள்முதல் மற்றும் நிர்மாணம் (நுPஊ) ஆகியவற்றில் ஒப்பற்ற முன்னோடியாக திகழ்கின்றது.

ஹேலீஸ் சோலர் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொஷேன் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் “தேசத்தின் அதிகரித்துச் செல்லும் வலுத் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய தீர்வுகளை கட்டியெழுப்புவதற்கு நாம் முயற்சி செய்கின்றோம்.

தற்போதைய மின் தடை மற்றும் எரிபொருள் இன்மை போன்றவற்றுக்கு சிறந்த தீர்வாக நுநெசபலநெவ அமைந்துள்ளது. நுகர்வோருக்கு தமது தினசரி வாழ்க்கையில் அவசியமான சாதனங்களை சௌகரியமான முறையில் வலுவூட்டுவதற்கு உதவியாக அமைந்துள்ளது.

மின் நெருக்கடிக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் இந்த தீர்வுகளை வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

எதிர்காலத்தில் மேலும் புத்தாக்கமான தீர்வுகளை அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.” என்றார்.

# கொமர்ஷல் வங்கியின் வெஸ்டர்ன் யூனியன் வாடிக்கையாளர்களுக்கு ஒளி விளக்குகள் பரிசாக வழங்கப்படவுள்ளன



கொமர்ஷல் வங்கியும், முன்னணி பணப் பரிமாற்ற நிறுவனமான வெஸ்டர்ன் யூனியனும் இணைந்து இன்றைய காலகட்டத்தில் தமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான சுநஉhயசபநயடிடந டுநுனு விளக்குகளை பரிசாக வழங்கும் திட்டத்தை தொடங்கி உள்ளன. 2022 செப்டம்பர் 15ம் திகதி வரை அல்லது கையிருப்பு உள்ள வரை ரூபாய். 10000ஃஸ்ரீ அல்லது அதற்கு மேற்பட்டத் தொகையை பணப்பரிமாற்றம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பிரசாரத்தின் மூலம் தனது வெஸ்டர்ன் யூனியன் வாடிக்கையாளர் தளம் விரிவடையும் எனவும் ஏற்கனவே இருக்கின்ற வாடிக்கையாளர்களுடனான உறவுகள் வலுவடையும் என்றும் வங்கி நம்பிக்கைத் தெரிவித்துள்ளது. மேலும் வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் பணப் பரிமாற்ற சந்தைப் பங்கு என்பனவற்றையும் இது ஊக்குவிக்கும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டுக்க நாடு, பல்வேறு விதமான நாணயங்களைப் பரிமாறுவதில், வெஸ்டர்ன் யூனியன் உலகில் முன்னணியில் வகிக்கும் ஒரு நிறுவனமாகும். உலகம் முழுவதிலும் 200 நாடுகளிலும் இடங்களிலும் 525,000 முகவர்களைக் கொண்டு அது செயல்படுகின்றது.

கொமர்ஷல் வங்கி 2019ல் வெஸ்டர்ன் யூனியனுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டது. உலகில் எந்தப் பாகத்தில் இருந்தும் குறிப்பாக அமெரிக்கா, கனடா. ஐரோப்பாவின் சில பகுதிகள், மற்றும் மத்திய கிழக்கு போன்ற பிரபலமான இடங்களில் இருந்து அனுப்பப்படும் பணத்தை உரிய வாடிக்கையாளர்கனுக்கு எவ்வித சிரமுமின்றி தமது கொமர்ஷல் வங்கிக் கிளையின் கரும பீடத்தில் இருந்து பெற்றுக் கொள்ள வழியமைக்கும் விதத்தில் இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி, வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்படுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான விடயத்தில் நாடு முழுவதும் 268 கிளைகளை வலையமைப்பைக் கொண்டுள்ளது. இவற்றுள் பல பொது விடுமுறை மற்றும் வங்கி வர்த்தக விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும் இயந்திர வலையமைப்பையும் அது கொண்டுள்ளது.

இலங்கையில் தனியார் வங்கி ஒன்று கொண்டுள்ள மிகப் பெரிய பணவிநியோக வலையமைப்பு இதுவேயாகும். வெளிநாடுகளில் இருந்து பணத்தை பெற்றுக்கொள்வோரின் வசதி கருதி அர்ப்பணத்தோடு பணியாற்றும் வாடிக்கையாளர் அழைப்பு பிரிவு, ஒருவருக்கு வழங்கப்படுவதற்கான பணம் கிடைக்கப் பெற்றதும் அதுபற்றி அவருக்கு அறிவிக்கும் குருந்தகவல் சேவை என்பனவற்றையும் கொமர்ஷல் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

# உள்ளூர் விவசாயிகளுக்கு Kubota வின் இயந்திரமயமாக்கப்பட்ட நெல் நடுகை தொழில்நுட்பத்தை வழங்கும் Hayleys Agriculture



நாட்டின் முன்னணி விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரண விநியோகஸ்தரான Hayleys Agriculture Holdings Ltd, உலகின் தலைசிறந்த விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில் பெயர்பெற்று விளங்குகிறது. கடந்த பல ஆண்டுகளாக புதிய விவசாய இயந்திரமயமாக்கல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளை சுலபமாக்குவதற்கும் விளைச்சலை அதிகரிக்கவும் Hayleys Agriculture உதவி வந்துள்ளது.

உலகின் முன்னணி விவசாய இயந்திர உற்பத்தி நிறுவனமான Kubota உடனான அதன் ஒத்துழைப்பு, கடந்த தசாப்தத்தில் புத்தாக்கமான விவசாய இயந்திரங்களுடன் உள்ளூர் விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது.

Kubota வின் SPW48C நெல் நடுகை இயந்திரம் அதன் புகழ் பெற்ற நெல் நடுகை தொழில்நுட்பத்துடன் 2013 ஆம் ஆண்டில் உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இலங்கையில் விவசாய இயந்திரமயமாக்கலில் ஒரு புதிய அத்தியாயத்தை வெளிப்படுத்தியிருந்தது.

Kubota நெல் நடுகை இயந்திரத்தின் உதவியுடன், நெல் நடுகை சீரான இடைவெளியில் நடப்படலாம் என்பதுடன், குறைந்த அளவு விதைகளைப் பயன்படுத்தி சிறந்த அறுவடையைப் பெற முடியும். இது கைமுறையாக நெல் நடுகை செய்வதை விட 20 மடங்கு அதிக செயல்திறனை உறுதி செய்வதுடன், நெல் நாற்றுகளை எந்தவித சேதமும் இல்லாமல் கவனமாக நடுகை செய்யும் திறனையும் கொண்டது. Kubota நெல் நடுகை இயந்திரம் FMRC சான்று அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இலங்கையில் பல சோதனைகள் மற்றும் பரீட்சார்த்த முயற்சிகளுக்கு உட்பட்டுள்ளதுடன், சோதனைகளின் போது, உள்ளூர் நெல் வயல்களில் அதன் பல்துறை திறனை நிரூபித்துள்ளது.

**உலக தற்கொலை தடுப்பு தினத்தில் எதிர்கால நம்பிக்கையை உருவாக்குவோம்!**

# வாழ்வின் வேதனைகளை தீர்க்கும் இறுதி முடிவு தற்கொலை அல்ல!

உலகதற்கொலை தடுப்பு தினமான, செப்டம்பர் 10, 2022க்கு ஆதரவாக, மறைந்து போன அன்புக்குரியவரையும், தற்கொலை முயற்ச்சியில் ஈடுபட்டுத் தப்பிய நபர்களையும் நினைவுகூரும் வகையில், இரவு 8.00 மணிக்கு மெழுகுவர்த்தி ஏற்றி 'சுமித்ராயோ'வுடன் கைகோர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தற்கொலை பற்றி பேசும்போது அதன் காரணங்கள், பரவல் மற்றும் ஆபத்து காரணிகள் மற்றும் நெருக்கடியில் உள்ளவர்கள் என்ன அனுபவிக்கிறார்கள்? எண்ணற்ற காரணங்களுக்காக மக்கள் தற்கொலை உணர்வுகளை அனுபவிக்கிறார்கள், அவற்றில் சில புரிந்து கொள்ளக் கூடியவை, மற்றவை புரிந்து கொள்வது மிகவும் கடினம். ஆனால் நெருக்கடியில் உள்ள நபருக்கு, மனச்சோர்வுடன் பிணைக்கப்பட்ட அவர்கள் அனுபவிக்கும் எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் மிகவும் உண்மையானவை மற்றும் முற்றிலும் தர்க்கரீதியானதாகத் தோன்றலாம்.

சுமித்ரயோ என்பது, கடந்த நான்கு தசாப்தங்களாக, பல ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் வாழ்வில் சிரமங்களை அனுபவிக்கும் நண்பர்களுடன் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்த ஒரு அமைப்பாகும்.

திருமண ஒற்றுமையின்மை, சமாளிக்க முடியாத கடன், பணியிடத்தில் அல்லது பள்ளியில் உள்ள பிரச்சினைகள், சகாக்களின் அழுத்தம் மற்றும் அவர்களின் உணர்ச்சி நல்வாழ்வை சமரசம் செய்யும் பிற பிரச்சினைகள் போன்ற சிக்கல்களால் துன்பம் அல்லது விரக்தியில் இருப்பவர்களுக்கு நாங்கள் இதுவரை நிவாரண ஆதாரமாக இருந்துள்ளோம். சுமித்ராயோவுடன் பேசி தற்கொலையின் விளிம்பில் இருந்து பின்வாங்கிவிட்டதாகச் சொல்பவர்களின் எண்ணிக்கை, நம் சமூகத்தில் உள்ள மன உளைச்சலின் அளவை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

சுமித்ராயோ கடந்த காலங்களில் துன்பத்தில் அல்லது விரக்தியில் உள்ள மக்களுடன் நட்புறவைக் கொண்டிருந்த ஒரு அமைப்பாக இருந்தபோதிலும், நவீன சமுதாயத்தில் இது மிகவும் பொருத்தமானது என்பதை, ஆதரவைப் பெற்றுக் கொண்ட நபர்களின் எண்ணிக்கையால் சுட்டிக்காட்டப்படுகிறது.

சமகால இலங்கையில் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் சிரேஷ்ட இளைஞர்கள் அனுபவிக்கும் பரபரப்பான வாழ்க்கை, இறப்பு எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுக்கிறது. இளம் குடும்பங்களில் பெற்றோர்கள் இருவரும் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உழைக்க வேண்டும்.

சமூகப் பிரச்சினைகளின் முழு பட்டியல் வெளிப்படுகிறது; ஒருவருக்கொருவர் நேரமின்மை, நீண்ட நேர வேலைக்குப் பிறகு வீட்டு விஷயங்களைச் சமாளிக்க இயலாமை, கேபிள் டிவி மற்றும் மேலய நாட்டு சமூகங்களால் பாதிக்கப்படும் வாழ்க்கை முறை தேவை, இணையம் மற்றும் சமூக ஊடக தளங்களை எளிதில் அணுகுவது உறவுகளின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

பெரும்பாலும், இந்த அழுத்தங்கள் பல மாதங்கள் அல்லது வருடங்களாக கவனிக்கப்படாமல் விடப்படும் போது, மேலும் அவை தீவிரமான மனஉளைச்சலை ஏற்படுத்தும் விகிதாசாரத்தில் வளர்ந்துள்ளன சுமித்ராயோவிடம் ஆதரவைத் தேடும் நபர்கள் 'தங்கள் பந்தத்தின் முடிவில்' இருப்பார்கள், மேலும் அவர்களின் நிவாரணத் தேடலில் எப்படியாவது எங்களைப் பற்றி கேள்விப்பட்டு கடைசி முயற்சியாக அமைப்பு பக்கத்திற்கு திரும்புகிறார்கள்.

ஒவ்வொரு வாரமும் சுமார் 150 பாதிக்கப்பட்ட நபர்கள் மையத்தை தொடர்பு கொள்கின்றனர். அவர்கள் வருகை, எழுதுதல், தொலைபேசி அல்லது மின்னஞ்சல், மூலம் ஸிமித்ரயோவுடன் தொடர்பு ஏற்படுத்த அக்கறையுள்ள, பாரபட்சம் இன்றி மற்றும் புரிந்துகொள்ளும் பயிற்சி பெற்ற நண்பருடன் தங்கள் எதுபார்ப்பு பதற்றம், அச்சங்கள் மற்றும் கவலைகளைப் பற்றி பேசுவதில் ஆறுதல் பெறுகிறார்கள்.




**தோல்வி, விரக்தி கொண்டோரின் துயரங்களைப் போக்குவதுடன், அவர்களுக்கு நல்வழி காட்டுவதற்கும் பாடுபடுவோம்!**

உணர்ச்சி நெருக்கடியை எதிர்கொள்ளும் நபர்களுக்குப் பெரும்பாலும் முறைசாரா மற்றும் இரகசிய உணர்ச்சிபூர்வமான ஆதரவு தேவைப்படுகிறது. சுமித்ராயோ தொண்டர்கள் நெருக்கடியில் உள்ள ஒவ்வொரு நபரையும் தீவிரமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

நெருக்கடியில் உள்ளவர்களுக்குப் பதிலளிப்பதில் அர்ப்பணிப்புடன், பாராபட்சம் இன்றி முனைப்புடன் கேட்பது மற்றும் தீர்ப்பளிக்காத பதில்களில் கவனம் செலுத்துவது, அவர்களின் நட்பின் குறிக்கோள், வாழ்க்கையை மேம்படுத்தும் தேர்வுகளைச் செய்ய சேவையை நாடுபவர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகும். வர்க்கம், இனம், மதம், அரசியல் அல்லது பாலியல் சார்பு போன்ற தடைகள் இல்லை.

சேவையை நாடுபவர்களுக்கு, முழு இரகசியத்தன்மையின் சூழலில் உணர்ச்சிபூர்வமான ஆதரவு வழங்கப்படுகிறது. தொடர்பு கொள்வதன் நோக்கம், சேவையை நாடுபவர்கள், தங்கள் சொந்த தீர்வுகள் அல்லது பதில்களைக் கண்டறிய உதவுவதும், தீர்வுகள் அல்லது பதில்கள் இருக்கும் இடத்தில், வெளிப்புற திசை அல்லது ஆலோசனையை வழங்குவது அல்ல. முனைப்புடன் கேட்பது, நட்பாகச் செய்யும் செயல்பாட்டின் ஒரு ஒருங்கிணைந்த செயலாகும்.

முனைப்புடன் செவிமடுத்தல் என்பது நெருக்கடியில் இருக்கும் நபருக்கு அவன்/அவள் என்ன உணர்கிறார் என்பது முக்கியம் என்றும், சேவையை வழங்குபவர், தம் நேரம் மற்றும் கவனத்திற்குத் தகுதியானவர் என்றும் கூறுகிறது. நெருக்கடியில் இருக்கும் நபருக்கு, முனைப்புடன் செவிமடுக்டும் ஒடுவருடன் தொடர்புகொள்வது அமைதியான மற்றும் நிலையான பயனன கொடுப்பதாக அனமயும்.

ஒரு நிமிடம் ஒருவரின் வாழ்க்கையை மாற்றும். தற்கொலை முயற்சி எண்ணத்துடன் வாழ்ந்தவர்கள், மற்றவர்களின் வார்த்தைகள் மற்றும் செயல்கள் எவ்வாறு முக்கியம் என்பதைப் பற்றி நமக்குக் கற்பிக்க நிறைய இருக்கிறது. அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை அடைவதைப் பற்றியும், இதற்கு வழிவகுக்கும் நாட்கள், மணிநேரம் மற்றும் நிமிடங்கள் பற்றியும் அவர்கள் அடிக்கடி பேசுகிறார்கள்.

தாங்கள் இறக்க விரும்பவில்லை என்று அவர்கள் அடிக்கடி விவரிக்கிறார்கள், மாறாக யாராவது தலையிட்டு அவர்களைத் தடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பலர் தங்கள் விரக்தியை உணர்ந்து அவர்கள் "நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்கும் ஒருவரைத் தீவிரமாகத் தேடுவதாகவும் கூறுகிறார்கள்.

ஊடகங்களும் தற்கொலை அறிக்கையுடன் தொடர்புடைய பரபரப்பான தன்மையை குறைக்க வேண்டும் அல்லது முற்றிலும் அகற்ற வேண்டும். தற்கொலைக்கான எளிய விளக்கங்களைத் தவிர்க்கவும். மறைந்த மேற்றிராணியார் லக்டாச டி மெல் அவர்களின் கைம்பெண் ணான மறைந்த திருமதி ஜோன் டி மெல் என்பவரால் 1974 இல் சுமித்ரயோ நிறுவப்பட்டது, சுமித்ரயோ இன்கிலாந்திள் சமாரியர்களை (Samaritans) மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

டி மெல் குடும்பத்தால் இந்த நோக்கத்திற்காக அன்பளிப்பு செய்யப்பட்ட ஹோர்டன் பிளேஸில் உள்ள வளாகத்தில் சுமித்ரயோ சேவையை வழங்குகிறது.

WHO கருத்துப்படி தற்கொலை முயற்சி ஆயுட்காலம் முழுவதும் நிகழ்கிறது. மற்றும் 2019 இல் உலகளவில் 15 29 வயதுடையவர்களில் இறப்புக்கான நான்காவது முக்கிய காரணமாகும். மேலும், கோவிட்19 தொற்றுநோய் புதிய சவால்களை முன்வைக்கிறது மற்றும் மன நலனில் அழுத்தத்தையும் ஏற்படுத்துகிறது.

தற்கொலை என்பது ஒரு சிக்கலான பிரச்சனை, இதற்கு ஒரே காரணமோ அல்லது ஒரு செயல்பாட்டு காரணமோ இல்லை. இது உயிரியல், உளவியல், சமூக, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் சிக்கலான தொடர்புகளின் விளைவாகும். தற்கொலைக்கு இன, வர்க்க வேறுபாடுகள் கிடையாது.

இருப்பினும், தற்கொலைகளையைத் தடுக்க முடியும் மற்றும் தற்கொலையைத் தடுப்பது அனைவரின் பொறுப்பாகும்

நட்புறவு சேவைகளுக்கும் கூடுதலாக, சுமித்ரயோ தற்கொலை விழிப்புணர்வு மற்றும் தடுப்பு தேவைப்படுபவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்துகிறது, இதில் அன்றாட வாழ்க்கையின் அழுத்தங்களைச் சமாளிக்கும் திறன்களை வளர்ப்பதற்கான திட்டங்கள் அடங்கும். சுமித்ரயோவிடம் 'மெல் மெதுர' என்ற சிறப்புப் பிரிவு உள்ளது – சுமித்ரயோ, மது,போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு, பாவனைக் குறைப்புத் திட்ட நிகழ்சி நிரல்கள் நடத்தப்படுகிறது. இது மது, போதைப்பொருள் போன்றவற்றில் சார்ந்திருப்பவர்களுக்கு உதவுகிறது.

எம் சமுதாயத்திற்காக பாடுபடுவது சுமித்ரயோவின் தூரப்பார்வையாகும்: பெரும்பாலும், வரவிருக்கும் தற்கொலையின் குறிகாட்டிகள் கண்டறியப்படாமல் போகும், அல்லது அவை கவனிக்கப்படுவதில்லை.

நீங்கள், அல்லது உங்கள் நண்பர்கள், அறிமுகமானவர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் எச்சரிக்கை அறிகுறிகளை வெளிப்படுத்தினால், அவர்களைக் கையாளப்பட வேண்டியது அவசியம்:

உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்க சுமித்ரயோ ஆண்டின் 365 நாட்களிலும் காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை திறந்திருக்கும். வருகை தந்தால் நேருக்கு நேர், சந்திப்பு மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உதவி கிடைக்கும். எங்கள் சேவை கண்டிப்பாக இரகசியமானது மற்றும் இலவசமானது.

**சுமித்ரயோவை தொடர்பு கொள்ளும் வழிகள்:**

தொலைபேசி: 0112692909 / 0112683555 / 0112696666
மின்னஞ்சல்: sumithra@sumithrayo.org /
இணையதளம்: www.sumithrayo.org
முகவரி: இல. 60/B ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 7. மெல் மெதுர
தொலைபேசி: 0112693460 / 0112694665
மின்னஞ்சல்: melmedura@sltnet.lk
இணையதளம்: www.melmedura.org

## தேசமான்ய பாக்கீர் மாக்கார்... (05ஆம் பக்கத் தொடர்)

"பாராளுமன்றத்தில் ஏறி இருந்து
பணிகளாற்றவும் வல்லார்"

என்ற நல்லதம்பி புலவரின் பாடல்கள் மக்கள் மதிப்பீட்டிலும் சரியாகப்பட்டதனாற்றான் பாக்கீர் பாராளுமன்றம் சென்றார்; சபாநாயகரனார்; அமைச்சரானார்; ஆளுநரானார்; சிலகாலம் பதில் ஜனாதிபதியுமானார்.

காஸிம் மௌலவியின் சூறத்துல் பாத்திஹா தமிழ் மொழிபெயர்ப்பு( தப்ஸீர்) வெளியீட்டு நிகழ்வு 2.12.1980 இல் சபாநாயகரின் வாசஸ்தலமான மும்தாஜ் மஹாலில் நிகழ்ந்த போது சபாநாயகர் பாக்கீர் மாக்கார், டொக்டர் எம். ஸி. எம். கலீல், அமைச்சர் எம்.எச். முஹம்மத் ஆகியோர் கலந்து கொண்டு உரைகள் நிகழ்த்தினர். சாஹிறாக் கல்லூரி இஸ்லாமியக் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதன் தலைவர் ஷாபிமரிக்கார் வரவேற்புரையையும் செயலாளர் என்ற வகையில் நான் நன்றி உரையும் நிகழ்த்தினோம்.

இந்நிகழ்வின் போது எம்.ஈ.எச்.மஹ்ரூப் (பா.உ.), டொக்டர் எம்.ஏ.எம். ஜலால்தீன் (பா.உ.), ஏ.அஸீஸ், உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.அப்துல் காதர் உள்ளிட்ட பலர் பிரசன்னமாயிருந்தனர்.

மருதானை ஐக்கிய போதனா கழகத்தின் பரிசளிப்பு விழா 24.4.1986 இல் நிகழ்ந்த போது பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

எழுத்தாளர் புன்னியாமினின் "இலக்கிய உலா", "அடிவானத்து ஒளிர்வுகள்"" இலக்கியவிருந்து"ஆகிய மூன்று நூல்களின் வெளியீடு 6.12.1987 இல் ரண்முத்து ஹோட்டலில் நிகழ்ந்த போது அந்நிகழ்விற்கு பாக்கீர் மாக்கார் தலைமை தாங்கினார். நானும் பங்கு கொண்டு உரையாற்றிய இந்நிகழ்வில் அமைச்சர் இராசதுரையின் சொற்பொழிவும் இடம்பெற்றது.

நிதானிதாசன், பிரோட்வே ஹில்மி ஆகியோரின் இணைந்த படைப்பாக வெளிவந்த "கன்னி மொட்டுகள்" நூல் வெளியீடும் பாக்கீர் மாக்கார் இன் தலைமையிற்றான் 10.3.1988 இல் நிகழ்ந்தது. அமைச்சர் இராசதுரை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் என்னுடைய சொற்பொழிவும் இடம்பெற்றது.

கொழும்புத் தமிழ் சங்கத்தில் 8.8.1988 இல் சங்கத் தலைவர் வ.மு.தியாகராஜாவின் தலைமையில் பாரத விழா கொண்டாடப்பட்ட போது தென்மாகாண ஆளுநராகவிருந்த பாக்கீர் மாக்காரும், பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்த செ.இராசதுரையும் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இருவரும் மிக நெருங்கிய நண்பர்கள். இவர்களின் நட்புக்கும் தமிழ் விவகார உதவிப் பணிப்பாளராக நான் இராசதுரையின் அமைச்சில் நியமனம் பெற்றதற்கும் சம்பந்தமிருக்கிறது. இவ்வைபவத்தில் நானும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினேன். எஸ்.எம்.சஹாப்தீன் நிழற்படத் திரைநீக்கமும், எஸ்.எம்.ஹனீபாவின்"மகா கவி பாரதி"நூல்வெளியீடும் இதேவைபவத்தில் நிகழ்ந்தன.

எஸ்.எம்.சஹாப்தீன் நிழற்படத்தைத் திரைநீக்கம் செய்துவிட்டு உரை நிகழ்த்திய பாக்கீர் மாக்கார் பின்வருமாறு கூறினார்:

"தமிழ் மொழிக்கென்று, தமிழ் இலக்கியத்திற்கென்று, ஏன்! தமிழ் இனத்திற்கென்றே போராடி, புரட்சிக் கவிதைகளைப் பாடிய பாரதியின் நினைவு தினத்தில் ஓர் இலக்கிய தொண்டனின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பது சாலப் பொருந்தும். மொழியால் தமிழனாகவும், இனத்தால் முஸ்லிமாகவும், தேசத்தால் இலங்கையனாகவுமிருந்த எஸ். எம்.சஹாப்தீன் அவர்களின் இலக்கியச் சேவைகளைப் பற்றி புத்தகம் புத்தகமாக எழுதலாம்.

எனக்குச் சென்னை மக்களைப் பற்றி அவ்வளவு தெரியாது, அதே போல் அவர்களுக்கும் என்னைப் பற்றித் தெரியாது. அப்படியான ஒரு காலகட்டத்தில் 1979 இல் இலங்கையில் ஓர் இஸ்லாமிய இலக்கிய மாநாட்டைக் கூட்டி அதற்குத் என்னை தலைமை பொறுப்பை ஏற்க செய்து, அதை வெற்றிகரமாக முடிவடையச் செய்தார். அதேபோன்று என்னை அங்கு வரவழைத்து ஒரு பெரிய விழாவினையே குலசேகர பட்டினத்தில் நடத்தி அங்குள்ள மக்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

இவை அனைத்தும் இன்றும் என் மனதில் மங்காத நினைவாக இருந்து கொண்டிருக்கிறது. சுமார் 30 ஆண்டு காலமாக தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்புப் புறக்கோட்டை செட்டியார் தெருவில் மீலாத் விழாக்களை நடத்தி தமிழ்நாட்டு அறிஞர்களை வரவழைத்து தமிழுக்கும் இஸ்லாத்துக்கும் அரும்பணியாற்றிய பிரிதொரு முஸ்லிம் மகனை நாம் எமது சமகாலத்தில் கண்டறியோம்.

நபிகளாரின் போதனைகளை நம் நாட்டுத் தமிழ் பெருங்குடி மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் பொதுக்கூட்டங்களை நடத்தி வரலாறு படைத்தவர் அவர். போதனைகளுக்கு மாத்திரம் மேடைகளை பாவிக்காது ஏழை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை அளிக்கும் விழாக்களுக்கும் பயன்படுத்தி புதுமையை ஏற்படுத்திய பெருமை சஹாப்தீனைச் சாரும்". (தினகரன்14.09.1988)

என்று அவ்வைபவத்தில் கூறி பாக்கீர் அமர்ந்த போது நான் கண்கலங்கிப் போனேன். அவரின் அழகு தமிழுரை என்னைக் கவர்ந்தது. "இவ்வளவு அழகாக இலக்கணம் சற்றும் வழுவாது தமிழ் பேசுகிறீர்களே"என்று நான் அவரிடம் தெரிவித்த போது, அதற்குப் பதிலளித்தவர், "நஹியா, பண்டிதர் நல்லதம்பியிடம் தமிழ் படித்தவன் நான்"என்றுஇறுமாப்புடன் விடைபகர்ந்தார். தன்னுடைய தமிழ் குரு நல்லதம்பி மீது அவர் வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் அன்றுதான் நான் உணர்ந்தேன்.

என்னுடைய 'அஸீஸும் தமிழும்'நூல் வெளியீடு கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் 20.7.1991 இல் நிகழ்ந்த போது தென்மாகாண ஆளுநராக அப்போது பதவி வகித்த பாக்கீரும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். அமைச்சர் மன்சூரும் பாக்கீரும் ஒருவருக்கொருவர் நூலை வழங்கி அந்நூலை வெளியிட்டு வைத்தமையும் என் மனக்கண்முன் இன்றும் நிழலாகின்றது.

மலேசியாவில் 1989 இல் நிகழ்ந்த அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பாக்கீர் மாக்கார், 1979 , ஜூன் 29,30, ஜூலை 01 ஆம் திகதிகளில் இலங்கையில் நிகழந்த நான்காவது அனைத்துலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டின் ஏற்பாட்டு குழுத் தலைவராகவும் செயற்பட்டதை நினைக்கும் போது அவரின் நிழலாய் நின்ற புலவர் நல்லதம்பியை நினைத்து கொண்டேன்.

பாக்கீர் மாக்காரின் ஆளுமை விருத்திக்கும், உயர்ந்தவற்றை நோக்கி உழைக்கும் பண்புக்கும் ஸாஹிறாவும் ஜாயாவும் காரணமாகின்றனர்.

என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கூற்று மிக்க அர்த்தபுஷ்டியுள்ளதாகவே எனக்குத் தெரிகிறது.அந்த வகையில் பாக்கீர் மாக்காரின் ஆளுமை விருத்தியில் ஸாஹிறாவும், ஜாயாவும் மட்டுமன்றி நல்லதம்பிக்கும் அப்போது ஸாஹிறாவில் நிலவிய தமிழ்ச் சூழலுக்கும் முக்கிய பங்கிருக்கிறது.

அதிபர் ஜாயாவின் தேசிய சிந்தனையும் ஆசிரியர் தம்புவின் பொதுவுடமை கருத்துக்களும் பாக்கீரின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்தின. அதனாற்றான் நேர்மையான அரசியல்வாதியாக சிங்கள, தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தின் ஆதர்சமாக பாக்கீர் மாக்காரினால் பிரகாசிக்க முடிந்தது.



முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் ஸ்தாபகரும் தலைமை போதகருமான வண ஜெயம் சாரங்கபாணியின் 64 ஆவது அகவை நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.



கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழா 05.09.2022 திங்கட்கிழமை சுபவேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 13.09.2022 சித்திரத்தேர் பவனியும், 14.09.2022 பால்குட பவனியும் இடம்பெறவுள்ளது. நிகழ்வுகள் அனைத்தும் ஆலய ஆதீனகர்த்தா திருமதி மகேஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (படங்கள்: எம்.நசார்)



(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை பொலிஸ் சேவையின் 156 வது ஆண்டினை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வுகள் அண்மையில் தெஹட்டகா பள்ளிவாசலில் நடைபெற்றன. இந் நிகழ்வில் அதிதியாக பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரம கலந்து கொண்டார். தெவட்டகஹா பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் றியாஸ் சாலி பொன்னாடை போர்த்தி பொலிஸ்மா அதிபரை வாழ்த்துவதைப் படத்தில் காணலாம். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அதிபர் நந்தன முனசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ.எம் நவாஸ் ஜவ்பர், உதவிப் பொலிஸ் அதிகாரி மொஹமட் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.